உ

சிவமயம்.

ஸ்ரீமத் அத்வைதானந்த

பரமஹம்ஸ பரிவ்ராஜக ஆசாரியரின்சீடராய

ஸ்ரீ சதானந்த பரமஹம்ஸ

பரிவ்ராஜக ஆசாரியர்

திருவாய் மலர்ந்தருளிய

# வேதாந்த சாராமிருதம்.

இது

திருக்களாண்டவரென்னும்

ஸ்ரீ வீரசேகர ஞானதேசிகர்

பாதசேகராகிய

ஸ்ரீ சுப்பைய சுவாமிக ளவர்களால்

தமிழில் மொழிபெயர்த்தருளப்பட்டு

ஷை சுவாமிகளவர்களால்

சென்னை, கோமளேசுவரன்பேட்டை,

சச்சிதானந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

இந்நூற்கு

அடியிற் குறிப்பித்துள்ள

மூன்று வியாக்கியானங்க ளிருக்கின்றன.

1. நரசிம்ம சரஸ்வதிகளவர்கள் அருளிச்செய்த சுபோதினி.

2. ராமதீர்த்தரவர்கள் அருளிச்செய்த வித்வன் மனோரஞ்சினி.

3. ஆபதேவரவர்கள் அருளிச்செய்த பாலபோதினி.

உ

ஓம் ஸ்ரீ கணேசாய நமஃ.

# வேதாந்த சாராமிருதம்.

## பாயிரம்.

ஞாயி றுமொளிர் வீர சேகர ஞான தேசிக மாமுக, தூய தாகி யபேதமாகிய தோன்ற லேகரு ணாநிதே, நீய தாமென நாயி னேனுடை நெஞ்சி லேநிகழ் வித்தவா, வாய தாயுரை யாடு வானுனை வாழ்த்தி வாழ்த்தி வணங்குவேன்.

கண்ட மின்றியே சச்சிதா னந்தமாய்க் கமழ்ந்தே
கண்ட நெஞ்செனு மிரண்டதுங் கவர்ந்திடா தாகிக்
கண்ட யாவையுந் தாங்குறுங் கரியெனுன் மாவாங்
கண்ட னைமன நினைகுவன் கருதிய துறவே.

அருத்தத் தானுமத் துவிதமா யானந்த மயமா
யருத்த மாந்துவி தங்கடந் தமர்ந்தவி ருவராங்
குருத்தம் பாதமெய் பணிந்தொரு குறிமதி யளவே
திருத்த மாமறை முடிரசத் தெள்ளமு துரைப்பேன்.

# வேதாந்த சாராமிருதம்.

## 1 - வது சாதனப் பிரகரணம்.

வேதாந்தமென்பது உபநிடதப்பிரமாணமும் அதனனுசாரியாய சாரீரக சூத்திரங்களுமாம். இதற்கு (இந்நூற்கு) வேதாந்தப் பிரகரணத்தன்மை யுண்மையின் அதற்குரியதாய அனுபந்தங்களாலேயே அஃதுடைய தாந்தன்மை பெறப்படுதலின், அவை தனித்தாராயத் தக்கனவன்றாம்.

ஆண்டனுபந்த மென்பது:— அதிகாரி, விஷயம், சம்பந்தம், பிரயோஜனம் என்பனவாம்.

1. அதிகாரியோ விதிவழிகற்ற வேத வேதாங்கத் தன்மையானே † முன்னரே அகில வேதார்த்தத்தை யறிந்தவனாய் இப்பிறப்பிலேனும் முற்பிறப்பி லேனும் காமிய நிஷித்த நீக்கவாயிலாய் நித்திய நைமித்திகப் பிராயச்சித்த உபாசனானுட்டானத்தால் நிகிலகல்மஷங் களும் நீங்கியிருத்தலின் நிதாந்த (அத்தியந்த) நின்மல அந்தக்கரணனும் சாதன சதுட்டய சம்பன்னனும் ஆய பிரமாதாவாம்.

துறக்காதி இஷ்டசாதனங்களாய ஜோதிட்டோமாதிகள் காமியங்களாம். நரகாதி யனிஷ்ட சாதனங்களாய வேதியரைக் கோறல் முதலியன நிஷித்தங்களாம். செய்யா தொழியிற் பிரத்யவாய (பாப) சாதனங்களாய சந்தியா வந்தனம் முதலியன நித்தியங்களாம். புத்திர ஜன்மாதி யனுபந்திகளாய ஜாதேஷ்டி முதலியன நைமித்திகங்களாம். பாபக்ஷய சாதனங்களாய சாந்திரா

---

† சாமானியமாக என்றும், ஆரம்பத்திலேயே என்றும் பொருள்படும்.

யண முதலியன பிராயச்சித்தங்களாம். சகுணப்பிரஹ்ம விஷய மானச வியாபார வடிவங்களாய சாண்டில்ய வித்தை முதலியன உபாசனைகளாம். (1) "அவ்விவ்வான்மாவை வேதானுவசனத்தினாலும் யாகத்தினாலும் பிராஹ்மணர் அறியும் பொருட்டு இச்சிக்கின்றனர்" என்றற்றொடக்கத்துச் சுருதியினானும், (2) "தவத்தாற் கல்மஷங் கொல்கின்றனர்" என்றற் றொடக்கத்து மிருதியினானும், இந்நித்தியாதி கட்கும் புத்தி சுத்தி மேலாய பயனாம். உபாசனைகட்கோ சித்தைகாக்ர்யம். (3) "கருமத்தாற் பிதுர்லோகம் வித்தையாற் றேவ லோகம்" என்றற்றொடக்கத்து மறைகளான், நித்திய நைமித்திகங்கட்கும் உபாசனைகட்கும் அவாந்தர பலம் பிதுர் லோக சத்தியலோகப் பிராப்தியாம். நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகா முத்திரார்த்த பலபோக விராகம், சமாதிசட்க சம்பத்தி, முமுக்ஷுத்வம் என்பன சாதனங்களாம்.

நித்தியா நித்திய வஸ்து விவேகமென்பது, பிரஹ்மமே நித்திய வஸ்து, அதின்வேறாய யாவும் அநித்தியமென்னும் விவேசனமாம்.

மாலை சந்தனவனிதாதி விஷய போகங்களாய ஐகிகங் (இங்குள்ளவை) கட்குக் கருமஜன்னியத்தன்மையானே அநித்தியத்தன்மை யுண்மைபோல், அமிருதாதி விஷயபோகங்களான ஆமுஷ்மிகங் (அங்குள்ளவை) கட்கும் அநித்தியத் தன்மையானே அவற்றினின்றும் நிரந்தர விரக்தி இகாமுத்திரார்த்த பலபோக விராகமாம்.

---

(1) பிருகதாரணிய உபநிடதம் - 4-4-22
(2) மநுஸ்மிருதி - 12-104
(3) பிருகதாரணிய உபநிடதம் - 1-5-16

சமாதிகளோ சமதமோபரதி திதிக்ஷா சமாதான சிரத்தை யெனப் பெயர் பெறுவனவாம்.

சமமென்பது, சிரவணாதி வியதிரிக்த விஷயங்களி னின்றும் மனத்தின் நிக்கிரகமாம். தமமென்பது சிரவ ணாதி வியதிரிக்த வியஷங்களினின்றும் புறப்பொறி களின் நிவர்த்தனமாம். நிவர்த்திதமாய இவற்றிற்குச் சிரவணாதி வியதிரிக்த விஷயங்களி னின்றும் உபர மணம் உபரதியாம்; அல்லது விகித கர்மங்கட்கு விதி யோடு பரித்தியாகம். திதிக்ஷையாவது சீதோஷ்ணாதி துவந் துவஞ் சகித்தலாம்; நிக்கிரகித்த மனத்திற்குச் சிரவணாதியினும் அதன் அனுகுண விஷயத்தின் (குரு சுசுரூஷையின்) கண்ணும் சமாதி (நிலைபெறுதல்) சமா தானமாம். ஆசிரியரருளிய ஆரணமுடி மொழிகளில் விசுவாஸம் சிரத்தையாம்.

முமுக்ஷுத்தன்மை மோக்ஷ இச்சையாம். (4)"சாந் தன் தாந்தன்" என்றற்றொடக்கத்துச் சுருதியான் இத் தகையவடிவினனாய பிரமாதா அதிகாரியாம்.(5)"உதித சாந்தசித் தனும்பொறி யொடுக்கிடுபவனுங், கதித வாறு செய் கசடறு குணங்கது வினனுஞ், சதத மேகுரு சேவைசெய் சன்முமுக்ஷுவுமாஞ், சதத மீதவன் பொருட்டளித் திடன்மிகத் தகுமால்" என்றும் கூறப் பட்டிருக்கின்றது.

2. விஷயம் ஜீவப்பிரஹ்மைக்கிய சுத்த சைதன் னியப் பிரமேயமாம்; ஆண்டே மறைமுடிகட்குக் கருத் திருத்தலின்.

---

(4) பிருகதாரணிய உபநிடதம் - 4-4-23

(5) உபதேசசகஸ்ரி-பார்த்திவப்பிரகரணம்-72

3. சம்பந்தமோ அவ்வயிக்கியப் பிரமேயத்திற்கும் அதன் பிரதிபாதக வுபநிஷத் பிரமாணத்திற்கும் போத்திய போதக பாவமாம்.

4. பிரயோஜனமோ, (6) "ஆன்மவித்துச் சோகத்தைக் கடக்கின்றான்" என்றற்றொடக்கத்து மறையினாலும், (7) "பிரஹ்மவித்துப் பிரஹ்மமேயாவன்" என்றற் றொடக்கத்துச் சுருதியினாலும், அவ்வயிக்கியப் பிரமேயத்துள்ள அஞ்ஞான நிவிருத்தியும் தன் வடிவானந்த வடைவும் ஆம்.

ஜனனமரணாதி சம்சார தாபத்தான் மிகவும் தபிக்கப்பட்டவனாய இவ்வதிகாரி சிரமெரியுண்பவன் தடமடுவை யடைதல் போல் உபகாரபாணியனாய் அசேஷ சாஸ்திர பாண்டித்யமும் பிரஹ்மநிஷ்டையுமுடைய ஆசிரியரை யடைந்து அவரை யனுசரித்திருப்பன் (8) "சமித்பாணியன் சுரோத்திரிய பிரஹ்மநிஷ்டனை" என்றற்றொடக்கத்துச் சுருதியினெனக்.

சாதனப்பிரகரணம் முற்றிற்று.

---

(6) சாந்தோக்கிய உபநிடதம் - 7-1-3
(7) முண்டகோபநிடதம் - 3-2-9
(8) முண்டகோபநிடதம் - 1-2-12

## 2-வது அத்தியாரோபப் பிரகரணம்.

அத்தேசிகேந்திரர் பரமகிருபையால் அத்தியாரோப அபவாத நியாயத்தானே இவற் கருள்புரிவர்; (9) "அடைந்த அன்னவன் பொருட்டு அந்த அறிஞன் அருளுவன்" என்றற்றொடக்கத்துச் சுருதியினுனென்க.

அரவபூதமல்லாத கயற்றின்கண் அரவாரோபம் போல் வஸ்துவின்கண் அவஸ்துவாரோபம் அத்தியாரோபமாம்.

சச்சிதானந்த அனந்த அத்வயப்பிரஹ்மம் வஸ்துவாம்.

அஞ்ஞானாதி சகலஜடசமூகம் அவஸ்துவாம்.

அஞ்ஞானமோ யானஞ்ஞன் என்றற்றொடக்கத்து அனுபவத்தானும், (10) "தன் குணங்களான் மறைபட்டிரா நின்ற தேவான்மசக்தியை" என்றற்றொடக்கத்து மறைகளானும், சதசத்துக்களாலனிர்வசனீயமாமென்றும், முக்குண வடிவமாமென்றும், ஞானவிரோதியாமென்றும், பாவரூபமாமென்றும், யாதோ சிறிது (பிரமோபாதானத்தன்மையது) ஆமென்றும் கூறுவர். இவ்வஞ்ஞானம் சமஷ்டி வியஷ்டி யபிப்பிராயத்தால் ஒன்றென்றும்பலவென்றும்வியவகரிக்கப்படும். அங்ஙனமன்றோ:—எங்ஙனம் தருக்களின் சமஷ்டி யபிப்பிராயத்தால் "வனம்" என்று ஒன்றுந்தன்மை கூறப்படுமோ, எங்ஙனம் ஜலங்களின் சமஷ்டியபிப்பிராயத்தால் "ஜலாசயம்" (தடாகம்) என்று கூறப்படுமோ, அங்ஙனம் நானாத்

(9) முண்டகோபநிடதம் - 1-2-13
(10) சுவேதாசுவதர உபநிடதம் - 1-3

தன்மையானே தோற்றுவனவாய ஜீவகத அஞ்ஞானங்களின் சமஷ்டி யபிப்பிராயத்தால் அவ்வொன்றாந் தன்மைக் கூற்றும்; (11) "அஜயாமேகையை" என்றற்றொடக்கத்துச் சுருதியினுமெனக்க.

இச்சமஷ்டி மேன்மையான உபாதியானே விசுத்த சத்வப் பிரதானமாம். இதனுபகிதசைதன்யம் சர்வஞ்ஞத் தன்மை, சர்வேஸ்வரத் தன்மை, சர்வநியந்துருத் தன்மை முதலிய குணங்களோடுகூடியதென்றும், அவ்யக்தமென்றும், அந்தரியாமியென்றும் உலக காரணமென்றும், ஈஸ்வரனென்றும் கூறப்படும்; (12) "எவன் சர்வஞ்ஞன் சர்வவித்து" என்னுஞ் சுருதியால்,எல்லா அஞ்ஞானங்களு மிலங்குகின்றமையின்.

இச்சமஷ்டி, அகிலகாரணத் தன்மையா லீசனுக்குக் காரண சரீரமாம், ஆனந்தப் பெருக்கத் தன்மையானும் கோசமொப்ப மறைத்தற் றன்மையானும், ஆனந்தமய கோசமாம். சர்வோபரமத் (எல்லாமடங்குந்) தன்மையானே துயிலாம். அதனானேயே தூலசூக்குமப் பிரபஞ்ச லயத்தான மெனவும் சொல்லப்படும்.

எங்ஙனம் வனத்திற்கு வியஷ்டி அபிப்பிராயத்தால் "தருக்கள்" என்று பலவாந்தன்மை கூறப்படுமோ, எங்ஙனம் ஜலாசயத்திற்கு (தடாகத்திற்கு) வியஷ்டி அபிப்பிராயத்தால் "ஜலங்கள்" என்று கூறப்படுமோ, அங்ஙனம் அஞ்ஞானத்திற்கு வியஷ்டி அபிப்பிராயத்தால் அப்பலவாந் தன்மை கூறப்படும்; (13) "பி-

(11) சுவேதாசுவதரஉபநிடதம் - 4-5

(12) முண்டக உபநிடதம் - 1-1-9

(13) பிருகதாரணிய உபநிடதம் -,2-5-19-

மான்மா மாயைகளால் பலவடிவமாய் விளங்குகின்றது" என்றற்றொடக்கத்துச் சுருதியினுமென்றுணர்க.

ஈண்டு வியஸ்த சமஸ்த வியாபித்தன்மையானே வியஷ்டி சமஷ்டித்வம் கூறப்படும். இவ்வியஷ்டி தாழ்மையான உபாதியானே மலின சத்துவப்பிரதானமாம். இவ்வுபகிதசைதன்யம் அற்பஞ்ஞத்தன்மை அனீஸ்வரத்தன்மை முதலிய குணங்களோடு கூடிய பிராஞ்ஞனென்று கூறப்படும்; ஓர் அஞ்ஞானத்தை விளக்குவிக்குந் தன்மையுண்மையின் என்றும், இவற்குப் பிராஞ்ஞத் தன்மையும் விளக்கமின்றிய உபாதியானே மிக்கொளிர்தற் றன்மை யின்மையின் என்றுமுணர்க. இவற்கு மிஃதகங்காராதி காரணத்தன்மையானே காரண சரீரமாம். ஆனந்தப் பெருக்கத்தன்மையானும் கோசமொப்ப மறைத்தற் றன்மையானும் ஆனந்தமயகோசமாம். சர்வோபரமத் (எல்லாமடங்குந்) தன்மையானே துயிலாம். அதனானேயே தூல சூக்கும சரீரப்பிரபஞ்ச லயத்தானமெனவும் கூறப்படும்.

அஞ்ஞான்று இவ்வீசுரப்பிராஞ்ஞர்கள் சைதன்ய விளக்கமுற்ற அதிசூக்கும அஞ்ஞான விருத்திகளால் ஆனந்தத்தை யனுபவிக்கின்றனர்; (14) "ஆனந்தம் புசிப்போன் சின்முகன் பிராஞ்ஞன்" என்னும் மறையானும், "யான்சுகமாய்த் துயின்றேன், ஒருசிறிது மறிந்திலேன்" என்று நித்திரையினின்றும் எழுந்தவனுக்கு ஆராய்ச்சி கூடுகின்றமையானும் என்க. இச்சமஷ்டி வியஷ்டிகட்குப் பேதம் வனமரங்கட்குப்போன்றேனும் ஜலாசய ஜலங்கட்குப்போன்றேனும் உணர்ந்துகொள்க. இதனுபகித ஈசுரப் பிராஞ்ஞர்கட்கும், தண்டலைதரு

(14) மாண்டூக்ய உபநிடதம் - 5

வவச்சின்ன ஆகாசங்கட்குப் போன்றேனும், ஜலாசய ஜலகத பிரதிபிம்ப ஆகாசங்கட்குப் போன்றேனும் பேதமாம். இதனை (15) "இவன் சர்வேஸ்வரன்" என்றற் றொடக்கத்துச் சுருதியானுணர்க.

தண்டலைதரு அதனவச்சின்ன ஆகாசங்கட்கேனும், ஜலாசய ஜல அதினுற்ற பிரதிபிம்ப ஆகாசங்கட்கேனும் ஆதாரபூத அனுபஹித ஆகாசம்போல், இவ்வஞ்ஞான அதனுபஹிதசைதன்யங்கட்கு ஆதாரபூத எவ்வுபகிதசைதன்யமோ அது துரியமென்று கூறப்படும். இதனை (16) "அத்வைதமாய சிவத்தை நான்காவதாய் நாடுகின்றனர்" என்றற்றொடக்கத்துச் சுருதியினுற் காண்க. இத்துரீயமாய சுத்தசைதன்னியம், அஞ்ஞானாதி அதனுபஹித சைதன்னியங்களினின்றும் அழலிடைப்பட்ட அயப்பிண்டம் போற் பிரிவு பெறுதகாய் மகாவாக்கியத்தின் வாச்சியமாமென்றும், பிரிவு பெற்றதா யிலக்கியமாமென்றுங் கூறப்படும்.

இவ்வஞ்ஞானத்திற்கு ஆவரண விக்ஷேபமெனப் பெயரிய இரண்டு சக்திகளுள. ஆவரண சக்தி ஆண்டற்பமேனும், மேகம் அநேகயோஜனைக்கணுற்ற ஆதித்திய மண்டலத்தை நோக்குபவன்றன் விழி நெறியை மூடலினுனே எங்ஙனம் மறைப்பது போன்றதாமோ, அங்ஙனம் அஞ்ஞானம் பரிச்சின்னமேனும் அபரிச்சின்ன அசம்சாரியாய ஆன்மாவைக் காண்பான்றன் மதியை மூடலினுனே மறைப்பது போன்றதாம்; அத்தகைய ஆற்றலாம். (17) "கந்தமேக

(15) மாண்டூக்ய உபநிடதம் - 6
(16) மாண்டூக்ய உபநிடதம் - 7
(17) அஸ்தாமலகீயம் - 10

மூடியவிழி கனமறை கதிரவற் காணு, தெந்தவாறதி மூடனு மொளிர்விலை யென்றுதா னெணுமோ, வந்த வாறஞ்ஞ விழியற்குப் பத்தம்போ லவிர்வுறு மெதுதா, னந்த நாசமற் றிலங்குறு மணியுரு வாத்துமா யானே'' என்று அங்கீகரிக்கப்பட்டுளது.

இவ்வாவரண சக்தி யவச்சின்னனாய ஆன்மாவிற் கே, தன்னஞ்ஞானத்தான் மறைப்புறுங் கயற்றின் கண் பாம்புத் தன்மைச் சம்பாவனையாகுமாறு போன்று, கர்த்துருத்துவ போக்துருத்துவ இன்பதுன்ப மோகவடிவ துச்ச சம்சாரபாவனையும் சம்பவிக்கும்.

விக்ஷேபசக்தியும், எங்ஙனம் பழுதையி னஞ்ஞானம் தான் மறைக்குங் கயற்றின் கண் தன்னாற்ற லால் பாம்பாதிகளை யுற்பவிக்கச் செய்யுமோ அங்ஙனம் அஞ்ஞானமும் தான் மறைத்த ஆன்மாவின் கண் விக்ஷேப சத்தியால் ஆகாசாதிப் பிரபஞ்சத்தைப் பிறப் பிக்கும்; அத்தகைய ஆற்றலாம். (18) "தோற்றலாஞ் சக்தி சூக்குமமாதி, பிரமவண்டாந்தஞ் சகற் பிறப்பிக் கும்" என்று அங்கீகரிக்கப்பட்டுளது. ஊர்ணநாபி (சிலந்தி, உலண்டு, ஊர்ண நாபி) என்னும் பிராணியானது நூற் காரியப் பொருட்டுத் தற்பிரதானத்தானே நிமித்தமும் தற்காயப் பிரதானத்தானே உபாதானமும் ஆவ தொப்ப, இருசக்தியோடுற்ற அஞ்ஞானோபஹிதமாய சைதன்யம் தற்பிரதானத்தானே நிமித்தமும், தன் னுபாதிப் பிரதானத் தானே உபாதானமும் ஆம்.

தமப்பிரதான விக்ஷேப சக்தியோடுற்ற அஞ்ஞா னோபஹித சைதன்யத்தினின்றும் ஆகாசம், ஆகாசத்தி னின்றும் காற்று, காற்றினின்றும் கனல், கனலினின்

(18) வாக்கியசுதை - 16

றும் நீர், நீரினின்றும் பூவும் உண்டாம்;(19) "இவ்வான் மாவினின்றும் ஆகாசம் உண்டாயிற்று" என்றற்றொடக்கந்துச் சுருதியினுலென்க. அவற்றில் ஜாட்டிய மிகுதி காண்டலின் தமப்பிராதான்யம் அதன்காரணத்திற்காம் (ஆகாசாதிகாரண அஞ்ஞானத்திற்காம்). அஞ்ஞான்று (சிருட்டிகாலத்தில்) சத்துவ ரஜஸ் தமசுக்கள் காரணகுண நன்முறையே அவ்வாகாசாதிகளின் மாட்டுதிக்கின்றன. இவையே சூக்குமபூதங்க ளென்றும் தன்மாத்திரைகளென்றும் அபஞ்சீகிருதங்களென்றும் கூறப்படுகின்றன.

இவற்றினின்றும் சூக்குமசரீரங்களும் தூலபூதங்களுமுண்டாகின்றன.

சூக்குமசரீரங்கள் பதினேழுவயவங்களாய லிங்க சரீரங்கள்.

அவயவங்களோ! ஞானேந்திரிய பஞ்சகமும், புத்தி மனங்களும், கன்மேந்திரிய பஞ்சகமும், வாயு பஞ்சகமும் என்பனவாம்.

ஞானேந்திரியங்கள், சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்குவை, கிராணமெனப் பெயரியனவாம். இவை ஆகாசாதிகளின் வியஸ்த சாத்துவிகாம்சங்களினின்றும் தனித்தனி முறையே உதயமாகின்றன.

புத்தி யென்பது நிச்சயவடிவ அந்தக்கரணவிருத்தியாம்.

மனமென்பது சங்கற்ப விகற்ப வடிவ அந்தக்கரண விருத்தியாம்.

இவற்றின் கண்ணேயே சித்த அகங்காரங்கட்கு அடக்கமாம். இவை மற்றுகாசாதிமாட்டுற்ற மிலித

(19) தைத்திரியோபநிடதம் - 2-1-1

(ஒன்றுசேர்ந்த) சாத்துவிகாம்சங்களினின்றும் உதயமாகின்றன. இவற்றிற்குப் பிரகாசவடிவத்தன்மையுண்மையின் சாத்துவிகாம்ச காரியத்துவமாம்.

இப்புத்தி ஞானேந்திரியங்களோடு கூடி விஞ்ஞானமயகோசமாம். இது கர்த்துருத்வ போக்துருத்வ சுகித்துவ துக்கித்துவாதி அபிமானத் தன்மையானே இகலோக பரலோக கமனவானான வியாவகாரிக ஜீவனெனக் கூறப்படுவன்.

மனமோ ஞானேந்திரியங்களோடு கூடியதாய் மனோமய கோசமாம்.

கன்மேந்திரியங்கள் வாக்கு பாணி பாதம் பாயு உபஸ்தமெனப் பெயரியனவாம். இவை மற்றாகாசாதிகளின் வியஸ்த இரஜோம்சங்களினின்றும் தனித்தனி முறையே பிறக்கின்றன.

வாயுக்கள்: பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்பனவாம். பிராணன் முன்னடையுடையோன்; மூக்கினுனித்தேசவாசி. அபானன் பின்னடை பெற்றோன்; பாயுவாதித் தானவான். வியானன் தசதிசை நடையுடையோன்; சரீரமுழுச் சஞ்சாரி. உதானன் கண்டத்தானியன்; மேனடையுடையனாய உற்கிரமணவாயு வாம். சமானன் சரீர நடுவுட் டங்குபவனாய் அயின்று மாந்திய அன்னாதி சமீகரண கரனும் (சாமியாவஸ்தையைச் செய்பவனும்).

சிலரோ, நாகன் கூர்மன் கிருகலன் தேவதத்தன் தனஞ்சயன் எனப் பெயரிய ஐந்தன்னிய வாயுக்கள் இருக்கின்றனவென்று கூறுகின்றனர். ஆண்டு, நாகன் உற்காரம் (வாந்தி) செய்பவனும்; கூர்மன் விழித்தல் செய்பவனும்; கிருகலன் பசியையுண்டுபண்ணுபவனும்;

தேவதத்தன் கொட்டாவிகொள்ளச் செய்பவனும்; தனஞ்சயன் போஷணஞ்செய்பவனும்; இவற்றிற்குப் பிராணாதிகளிலடக்கங் கூடலிற் [redacted]யெனச் சிலர் கூறுவர்.

இப்பிராணாதி பஞ்சகம் [redacted] ஆகாசாதி[redacted]களுள்ள மிலித இரஜோம்சத்தினின்றுதிக்கிறது. இப்பிராணாதி பஞ்சகம் கன்மேந்திரியங்களோடு கூடியதாய்ப்பிராணமய கோசமாம். இதற்குத் தொழில் வடிவத்தன்மையானே இரஜோம்சகாரியத் தன்மையாம். இக்கோசங்களின் மத்தியில் விஞ்ஞானமயன்—ஞானசக்திமான், கர்த்தா வடிவன்; மனோமயன்—இச்சாசக்திமான், கரணவடிவன்; பிராணமயன்—கிரியாசக்திமான், காரிய வடிவன்; தகுதித்தகைமையானே இன்னணமிவற்றின் பகுப்பெனக் கூறுகின்றனர். இம்முக்கோசங்களும் ஒருங்கு கூடிச் சூக்கும சரீரமெனச் சொல்லப்படும்.

ஈண்டும், அகில சூக்கும சரீரம் ஏக புத்திவிஷயத்தானே வனம்போற்சலாசயம்போலேனும் சமஷ்டியும், அனேக புத்திவிஷயத்தானே தருப்போ னீர்போலேனும் வியஷ்டியுமாம். இச்சமஷ்டியுபகித சைதன்யம் சூத்திரான்மா, இரணியகருப்பன், பிராணன் என்றும் கூறப்படும். யாண்டு முட்புகுந்திருத்தலினானும், ஞானம் இச்சை கிரியைச் சத்திமத் துபகிதத் தன்மையானும் என்க. இதற்குச் சமஷ்டி தூலப் பிரபஞ்சாபேக்ஷையானே சூக்குமத் தன்மையாற் சூக்கும சரீரம், விஞ்ஞானமயாதி முக்கோசம், நனவாதனைமயத் தன்மையாற் கனா, அதனானேயே, தூலப்பிரபஞ்ச லயத்தானம் எனவும் கூறப்படும்.

இவ்வியஷ்டி யுபகித சைதன்யம் தைஜசனும்; தேஜோமய அந்தக்கரண உபகிதத் தன்மை யுண்மை யின். இதற்கு மிவ்வியஷ்டி தூலதேகாபேக்ஷயானே சூக்குமத் தன்மையானென்னு, மேதுவினுனேயே சூக் குமதேகம் விஞ்ஞானமயாதி முக்கோசம். கனவாதனே மயத் தன்மையாற்கனு; அதனுனேயே, தூலசரீரலயத் தான மெனவுங் கூறப்படும்.

இச்சூத்திரான்ம தைஜசர்கள் அக்கால் மனோ விருத்திகளால் சூக்கும விஷயங்களை யனுபவிக் கின்றனர்; (21) "மிகப்பகுத் துண்போன் தைஜ சன்" என்றற்றொடக்கத்துச் சுருதியானென்க. ஈண் டும், சமஷ்டி வியஷ்டிகட்கும் அதனுபகித சூத்திரான் மாதைஜசர்கட்கும், வனந்தருப் போன்றும், அதனவச் சின்ன ஆகாசம் போன்றும், ஜலாசயம் ஜலம் போன் றும், அதினுற்ற பிரதிபிம்ப ஆகாசம்போன்றும் அபே தமாம்; இன்னணம் சூக்கும சரீர உற்பத்தியாம்.

தூலபூதங்களோ பஞ்சீகிருதங்களாம். பஞ்சீகரண மோ, ஆகாசாதி ஐந்தனுள் ஒவ்வொன்றை யிருகூறாய்ச் சமமாய்ப் பகுத்து அப்பத்துப் பாகங்களுள் முதலன வாய ஐந்து பாகங்களைத் தனித்தனி நான்கு கூறாய்ச் சமமாய்ப் பகுத்து, தன்ற னிரண்டாவதரைப் பாகப் பரித்தியாகத்தால் வேறு பாகங்களில் அந்நான்கு பாக ங்களின் சேர்க்கையாமென்க. (22) "வகிர்ந்திரண்டொ ன்றுநால் வகைசெய் தாதியைத், தகவித ரங்களிற் சாத் துவ்வைந் தாம்" என்று அஃதறையப்பட்டுளது. இத ற்குப் பிரமாணமின்றென்று சங்கியாதொழிக; திரி

(21) மாண்டூக்ய உபநிடதம் - 4.

(22) பஞ்சதசி-1-23.

விருத்கரண" சுருதியிற்றேற் பஞ்சீகரணத்திற்கும் உப லக்ஷணத்தன்மை யுண்மையின்; ஐந்திற்கும் ஐவடிவத் தன்மையிற் சமான மிருப்பினும் அவற்றினுள்ளும் (23) ''விசேடத்தன்மையா னவ்வாத மவ்வாதம்'' என்னும் நியாயத்தான் ஆகாசாதிக்கூற்றுச் சம்பவிக்கு மென்க.

அஞ்ஞான் ருகாசத்தின்கண் ணொலியும், வாயுவின்கண் ணொலி யூறுகளும், அழலின்கண் ணொலியூறுருவங்களும், நீரின்கண் ணொலி யூறுருவ விரதங்களும், பிருதிவியின்கண் ணொலி யூறுருவ விரத நாற்றங்களும் நன்கிலங்கா நிற்கும்.

இப்பஞ்சீகிருத பூதங்களினின்றும், பூலோகம் - புவலோகம் - சுவலோகம் - மகலோகம் - ஜனலோகம்-தபலோகம்-சத்தியலோகம்என்னுமிந்நாமங்களியையப் பெற்றனவாய் மேன்மே லிருப்பனவும், அதலலோகம் - விதலலோகம் - சுதலலோகம் - இரசாதலலோகம் - தலாதலலோகம் - மகாதலலோகம் - பாதாளலோகம் எனப் பெயர் பெறுவனவாய்க் கீழ்க்கீழிருப்பனவுமாய உலகங்களும், பிரஹ்மாண்டமும், அதனுள்ளுற்ற நால்வகைத் தூல சரீரங்களும், அவற்றிற் குசிதமாய அன்ன பானதிகளும் உற்பத்தியாம்.

நால்வகைத் தேகங்களோ ஜராயுஜம் அண்டஜம் உற்பிஜ்ஜம் சுவேதஜம் எனப்பெயர் பெறுவனவாம்.

ஜராயுக்க (பைக)ளினின்றும் பிறப்பனவாயமனுட் பசுவாதிகள் ஜராயுஜங்களாம். அண்டங் (முட்டை)களினின்றும் பிறப்பனவாய பறவை பன்னகாதிகள் அண்

(23) பிரஹ்ம சூத்திரம்-2-4-22.

டங்களாம். பூமியைப் பிளந்து பிறப்பனவாய கக்ஷ (புற்கொடி) விருக்ஷாதிகள் உற்பிஜ்ஜங்களாம்; வேர் வையினின்றும் பிறப்பனவாய யூகமசகாதிகள் (பேன் கொதுகாதிகள்) சுவேதஜங்களாம்.

ஈண்டும், சதுர்வித சகல தூலசரீரம் ஏகானேக புத்தி விஷயத்தானே வனம்போற் சலாசயம் போன் றேனும் சமஷ்டியும், தருப்போற் சலம்போன்றேனும் வியஷ்டியுமாம். இச்சமஷ்டியுபஹித சைதன்யம் வை ஶ்வானர னென்றும், விராட்டென்றும் விளம்பப்பெ றும்; எல்லா நராபிமானித் தன்மையானும் பல்விதமா யிலங்குந் தன்மையானு மென்க. இதற் கிச்சமஷ்டி தூல சரீரமாம். அன்னவிகாரத் தன்மையானே அன்ன மயகோசமாம்; தூல போகாயதனத் தன்மையானே தூல சரீரம், நனுவெனவும் நவிலப்பெறும். இவ்விய ஷ்டி யுபஹித சைதன்யம் விசுவனென விளம்பப் பெறுவன். சூக்கும சரீராபிமானத்தை விடாமல் தூல சரீராதிப் பிரவிஷ்டத் தன்மை (நுழைந்த தன்மை) யுண்மையின் என்க. இவற்கு மிவ்வியஷ்டி தூல சரீர மாம்; அன்னவிகாரத் தன்மையான் என்னும் ஏதுவி னுனே அன்னமய கோசமாம்; நனுவெனவும் நவிலப் பெறும்.

அக்காலிவ்விஶ்வ வைஶ்வாநரர்கள், திக்கு, வாதம், அருக்கன், வருணன், அஶ்வினி குமாரர், என்பவரான் முறையே யேவிய காதாதி யிந்திரியமைந்தால் முறை யே ஓசை யூறுருவ விரதநாற்றங்களும், அக்னி இந் திரன் உபேந்திரன் யமன் பிரஜாபதி என்பவரான் முறையே யேவிய வாக்காதி இந்திரிய பஞ்சகத்தான் முறையே வசனம் ஆதானம் கமனம் விசர்க்கம் ஆனந்

தம் என்பனவும், சந்திரன் சதுர்முகன் சங்கரன் அச்யுதன் என்பவரான் முறையே யேவிய மனம் புத்தி அகங்காரம் சித்தம் எனப் பெயரிய உட்பொறி நான்கால் முறையே சங்கற்ப நிச்சய * அகங்கார்ய சைதந்தங்களும் என்னு மிவ்வெல்லாத்தூல விடயங்களை யனுபவிப்பார்கள்; (24) "ஜாகரித ஸ்தானம் வெளிப் பிரஞ்ஞன்" என்பதாதி மறையாற் காண்க.

ஈண்டும் இத்தூல வியஷ்டி சமஷ்டிகட்கும் அதனுபஹித விப்வ வைப்வானரர்கட்கும் வனவிருக்ஷம் போன்றும், அதனவச்சின்ன ஆகாசம் போன்றும், ஜலாசய ஜலம்போன்றும், அதன்கணுற்ற பிரதிபிம்ப ஆகாசம்போன்றும் முன்போல் அபேதமாம். இவ்வண்ணம் பஞ்சீகிருத பஞ்சபூதங்களி னின்றும் தூலப் பிரபஞ்ச உற்பத்தியாம்.

இத்தூலசூக்கும காரணப் பிரபஞ்சங்களின் சமஷ்டியும் ஒரு மகாப்பிரபஞ்சமாம்; எங்ஙனம் அவாந்தர வனங்களின் சமஷ்டி யொரு பெருவனமாமோ, எங்ஙனந்தான் அவாந்தர ஜலாசயங்களின் சமஷ்டி யொரு மகாஜலாசயமாமோ, இதனுபகிதமாய வைப்வானராதி ஈப்வர பரியந்தமாய சைதன்யமும் அவாந்தரவனவச்சின்ன ஆகாசம் போன்றும், அவாந்தர ஜலாசயகதப் பிரதிபிம்ப ஆகாசம்போன்றும் ஒன்றேயாம். இம்மகாப் பிரபஞ்ச அதனுபஹித சைதன்யங்களோடுந் தப்தாய பிண்டம்போல் பகுக்கப்படாததாய் அனுபஹித சைதன்யம் (25) "அணிவாய் இவ்வெல்லாம் பிரஹ்மமே" என்னும் மெய்ம்மொழிக்கு வாச்சியமாம்; பகுக்கப்

* அகங்கார விஷய கருவம், சித்தவிஷய ஸ்மரணம்.

(24) மாண்டூக்கிய வுபநிடதம்-3.

(25) சாந்தோக்கிய உபநிடதம் - 3-14-1.

பெற்றதாய் இலக்கியமாம். இன்னணம் வஸ்துவின் கண் அவஸ்துவின் ஆரோபமாய அத்தியாரோபம் சாமானியமாய்க் காட்டப்பட்டது.

இஞ்ஞான்று பிரத்தியக்கான்மாவின் கண் இதை இதை இவர் இவர் ஆரோபிக்கின்றார் என்று விசேஷமாய்க்கூறப்பெறும். அதிப்பிராகிருதர்களோ(26)"ஆன்மாவுராகுய் மைந்தன்" என்பதாதி சுருதியாலும், தன் பாற்போற் புத்திரன்பாலும் பிரியங் காண்டலினாலும், மைந்தன் புஷ்டனாயினும் நஷ்டனாயினும் யானே புஷ்டனும் நஷ்டனும் என்பதாதி யனுபவத்தாலும் மைந்தன் ஆன்மாவென வழங்குகின்றனர்.

சார்வாகரோ:—(27)"அவ்விப்புருடன் அன்னரசமயன்" என்பதாதி சுருதியினாலும், எரிபற்றிய இல்லத்தினின்றும் தன் சுதனைவிட்டேனும் தனது வெளிவருகை காணலாலும், "பருத்தேன் இளைத்தேன்" என்பதாதி யனுபவத்தாலும் தூலவாகம் (சரீரம்) ஆன்மாவெனச் சொல்லாநிற்பர்.

வேறு சார்வாகர்:—(28)"அப் பிராணன்கள்(அவ்விந்திரியங்கள்) பிதாவாய பிரஜாபதியை யடைந்து கூறின" என்பதாதி சுருதியினாலும், பொறிகளின்றேற் சரீரசலன மின்மையினாலும், "குருடன் யான் செவிடன் யான்" என்பதாதி யனுபவத்தாலும் இந்திரியங்கள் ஆன்மாவென இயம்புவர்.

வேறு சார்வாகர்:— (29) "வேறு உள்ளான்மாப் பிராணமயன்" என்பதாதி சுருதியினாலும், பிராணனின்

(26) கௌஷீதகீ பிராஹ்மணோப நிடதம் - 2-11.
(27) தைத்திரீயோப நிடதம் - 2-1-1.
(28) சாந்தோக்யோப நிடதம் - 5-1-7.
(29) தைத்திரீயோப நிடதம் - 2-2-1.

றிப் பொறியாதிகளின் சலனமேலாமையினானும், "யானையிலும் வேட்கையன் யான்முக வேட்கையன்" என்பதாதி யனுபவத்தானும் பிராணன் ஆன்மாவெனப் பேசா நிற்பர்.

வேறு சார்வாகரோ:—(30) "வேறு உள்ளான்மா மனோமயன்" என்பதாதிசுருதியினானும், மனந்துயிலிற் பிராணாதி யபாவத்தானும் "யான் சங்கற்பவான், யான் விகற்பவான்" என்பதாதி யனுபவத்தானும், மனம் ஆன்மாவென மலரா நிற்பர்.

பௌத்தரோ:—(31) "வேறு உள்ளான்மா விஞ்ஞான மயன்" என்னுஞ் சுருதியினானும், கருத்தாவின் றேற் கரணத்திற் காற்ற லின்மையினானும், யான் கர்த்தா யான் போக்தா" என்பதாதி யனுபவத்தானும் புந்தி யான்மாவெனப் புகலா நிற்பர்.

பிரபாகர தார்க்கிகரோ:—(32) "வேறு உள்ளான்மா ஆனந்தமயன்" என்பதாதி சுருதியினானும், மதியாதிகட்கு அஞ்ஞானத்தின்கண் ணொடுக்கங் காண்டலினானும், "யானஞ்ஞன்,, யானஞ்ஞானி" என்பதாதி யனுபவத்தானும் அஞ்ஞானம் ஆன்மாவென அறையா நிற்பர்.

பாட்டரோ:—(33)"பிரஞ்ஞானகனனே யானந்தமயன்" என்பதாதி சுருதியினானும், துயிலிற் பிரகாச அப்பிரகாச மிருத்தலினானும், என்னையானறியேன்" என்பதாதி யனுபவத்தானும், அஞ்ஞானோபஹித சைதன்யம் ஆன்மாவென அறையா நிற்பர்.

---

(30) தைத்திரீயோப நிடதம் - 2-3-1.
(31) தைத்ரியோப நிடதம் - 2-4-1.
(32) தைத்ரியோப நிடதம் - 2-5-1.
(33) மாண்டூக்ய உபநிடதம் - 5.

வேறு பௌத்தர்:—(34) "இது முன் அசத்தாகவே யிருந்தது" என்பதாதி சுருதியினாலும், துயிலில் எவையும் இன்மையினாலும், "யான் றுயிலின்கண் ணிருந்தேனில்லை" என வெழுந்தானுக்கு இயற்கை ஆராய்ச்சி விஷய அனுபவமிருத்தலினாலும், சூனியம் ஆன்மாவெனச் சொல்லா நிற்பர்.

இப் புத்திராதிகட்கு அனான்மத்வ மியம்பப் பெறும்.

இவ் வதிப்பிராகிருதாதி வாதியர் கூறிய சுருதி யுக்தி யனுபவ ஆபாசங்களில் முன் முன் மொழிந்த சுருதி யுக்தி யனுபவ ஆபாசங்கட்குப் பிற்பிற் சுருதி யுக்தி யனுபவ ஆபாசங்களான் ஆன்மத் தன்மைப் பாதங் காண்டலின் மைந்தராதியர்க் கனான்மத்தன்மை வெட்டவெளியாம்; மேலும் "பிரத்தியக்கு, அத்தூலம், அசக்ஷு, அப்பிராணன், அமனன், அகர்த்தா, சைதன்யம், சின்மாத்திரம், சத்து" என்பதாதி பிரபல சுருதி விரோதத்தானும், இப்புத்திரன் முதற் சூனியமீறுய சடத்திற்குஞ் சைதன்ய விடயத்தன்மையாமென கடாதி போன்று அநித்தியத்தன்மை யுண்மையானும் யான் பிரஹ்மமென்னும் அறிஞரனுபவப் பிராபல்யத் தானும், அவ்வச்சுருதி யுக்தி யனுபவ ஆபாசங்கட்குப் பாதிதத்தன்மை யுண்மை யானும், புத்திரன் முதற் சூனியமீறுய யாவும் அனான்மாவே யாம். ஆகையினுல் லதையதை விளக்கும் நித்திய சுத்த புத்த முக்த சத்திய இயல்பினதாய பிரத்யக்குச் சைதன்யமே ஆன்மவஸ்து வென வேதாந்த வித்வதனுபவமாம். இவ்வண்ணம் அத்தியாரோபம் இயம்பப்பெற்றது.

அத்தியாரோபப் பிரகாரணம்

முற்றிற்று.

(34) சாந்தோக்யோபநிடதம் - 6-2-1.

# 3-வது அபவாதப் பிரகரணம்.

அபவாதமென்பது இரச்சு விவர்த்தமாய சர்ப்பத்திற்கு இரச்சுமாத்திரத்தன்மை போல், வஸ்து விவர்த்தமாய் அவஸ்துவாய அஞ்ஞானாதிப் பிரபஞ்சத்திற்கு வஸ்துமாத்திரத் தன்மையாம். "அரிய வுண்மைய தாகி யயலதாய், விரிவ தைப்புகல் வார்கள் விகாரமே, யரிய வின்மைய தாகி யயலதாய், விரிவதைப் புகல்வார்கள் விவர்த்தமே." என்று அஃதறையப்பட்டுள்ளது. அங்ஙனமன்றேல்:—இப்போகாயதனமாய (போகத்திற்கிடமாய) சதுர்வித சகல தூலசரீர ஜாதமும், போக்கிய வடிவ அன்னபானாதிகமும், இதனிடமாம் வடிவப் பூவாதி சதுர்த்தச புவனங்களும், இதனிடமாம் வடிவப் பிரஹ்மாண்டமும் என்னும் இவையாவும் இவற்றின் காரணவடிவப் பஞ்சீகிருதபூத மாத்திரமாம். இச்சத்தாதி விஷய சகித பஞ்சீகிருத பூதங்களும் சூக்கும சரீரஜாத (கூட்ட)மும் என்னுமிவையாவும் இவற்றின் காரணவடிவ அபஞ்சீகிருதபூத மாத்திரமாம். இச்சத்துவாதிகுண சகித அபஞ்சீகிருதங்கள், உற்பத்தி விபரீதக்கிரமமாய் இதன் காரணபூத அஞ்ஞானோபஹித சைதன்ய மாத்திரமாகின்றன. இவ்வஞ்ஞானமும் அஞ்ஞானோபஹித சைதன்யமாய ஈஸ்வராதிகமும் இதனாதார பூதஅனுபஹித சைதன்யரூபமாய துரீயப் பிரஹ்ம மாத்திரமாம்.

இவ்வத்தியாரோப அபவாதங்களால் தத்துவம் பதார்த்த சோதனமும் துணிபப்பெற்றதாம். அங்ஙனமன்றேல்:—அஞ்ஞானாதி சமஷ்டியும், இதனுபஹிதசர்வஞ்ஞத்வாதி விசிஷ்ட சைதன்யமும், இதனனுபஹித

மும் என்னும் இம்மூன்றும் தப்தாய பிண்டம்போல் ஒருமையாய் ஒளிர்வதே தத்பத வாச்சியார்த்தமாம்; இவ்வுபாதியுபகித ஆதாரபூதமாய அனுபகித சைதன்யம் தத்பத இலக்ஷியார்த்தமாம். அஞ்ஞானாதி வியஷ்டியும், இதனுபகிதமாய அற்பஞ்ஞத் தன்மையாதி விசிஷ்ட சைதன்யமும், இதனனுபகிதமும் என்னுமிம் மூன்றும் தப்தாயபிண்டம்போல் ஒருமையாய் ஒளிர்வதே துவம்பத வாச்சியார்த்தமாம்; இவ்வுபாதியுபகித ஆதாரபூதமாய அனுபகித பிரத்தியக்கானந்த ரூபமாய துரீய சைதன்யம் துவம்பத இலக்கியார்த்தமாம்.

அ ப வா த ப் பி ர க ர ண ம்

முற்றிற்று.

## 4 - வது மகாவாக்கியப் பிரகரணம்.

இனி மகாவாக்கியப்பொருள் வருணிக்கப்படும்:— இத்தத்துவமசி வாக்கியம் சம்பந்தத்திரயத்தால் அகண்டார்த்த போதகமாம். சம்பந்தத்திரயமென்பது பதங்கட்குச் சாமானாதிகரண்யமும், பதார்த்தங்கட்கு விசேஷண விசேஷ்யபாவமும், பிரத்தியக்கான்ம லக்ஷண (லக்ஷக)ங் கட்கு லக்ஷியலக்ஷண பாவமுமெனவாம். "சாமானாதி கரண்யம், விசேஷண விசேஷ்யதை, இலக்ஷிய இலக்ஷணசம்பந்தம் என்னுமிம்மூன்றும் பதார்த்தப் பிரத்தியக்காத்மாக்கட்காம் (பதார்த்தங்கட்கும் பிரத்தியக்கான்மாவிற்கும் என்றேனும், பதத்திற்கும் அர்த்தத்திற்கும் பிரத்தியக்கான்மாவிற்கு மென்றேனுங் கொள்க)" என்று அறைந்தறையப்பட்டுளது.

சாமாநாதிகரண்யசம்பந்தமாண்டெங்ஙனம்:-'சோயந்தேவதத்தஃ(அந்தத் தேவதத்தனே இந்தத்தேவதத்தன்)" என்னுமிவ்வாக்கியத்தின் கண் அக்கால விசிஷ்ட தேவதத்தவாசக "ஸ" (அந்தத்தேவதத்தன்) சப்தத்திற்கும், இக்கால விசிஷ்ட தேவதத்தவாசக "அயம்" (இந்தத்தேவதத்தன்) சப்தத்திற்கும், ஒரு பிண்டத்திற் றுற்பரியசம்பந்தமாம்; அங்ஙனம் ஈண்டு "தத்துவமசி" என்னும் வாக்கியத்தினும் பரோக்ஷத்வாதி விசிஷ்ட சைதன்யவாசக தற்பதத்திற்கும், அபரோக்ஷத்வாதி விசிஷ்ட சைதன்யவாசக துவம்பதத்திற்கும் ஒரு சைதன்னியத்தின்கண் தாத்பர்ய சம்பந்தமாம்.

விசேஷண விசேஷ்யபாவ சம்பந்தமோ:—எங்ஙனம் அவ்வாக்கியத்தின் கண்ணேயே "ச" சப்தார்த்தமாய அக்கால விசிஷ்டதேவதத்தனுக்கும், "அயம்" சப்தார்த்தமாய இக்கால விசிஷ்ட தேவதத்தனுக்கும் பரஸ்பரம் பேத நீக்கத்தானே விசேஷண விசேஷ்யபாவமாமோ, அங்ஙனம் இவ்வாக்கியத்தின் கண்ணும் தத்பதார்த்த பரோக்ஷத்வாதி விசிஷ்ட சைதன்யத்திற்கும் துவம்பதார்த்த அபரோக்ஷத்வாதி விசிஷ்ட சைதன்யத்திற்கும் பாஸ்பரம் பேதநீக்கத்தானே விசேஷண விசேஷ்ய பாவமாம்.

லக்ஷிய லக்ஷண சம்பந்தமோ:—எங்ஙனம் ஆண்டே "ச" சப்த "அயம்" சப்தங்கட்கேனும் அதனர்த்தங்கட்கேனும் விருத்த அக்கால இக்கால விசிஷ்டத் தன்மையின் பரித்தியாகத்தானே அவிருத்த தேவதத்தனோடு கூட லக்ஷிய லக்ஷணபாவமாமோ, அங்ஙனமிவ்வாக்கியத்தின் கண்ணும் தத்துவம் பதங்கட்கேனும் அதனர்த்தங்கட்கேனும் விருத்த பரோ

க்ஷத்வ அபரோக்ஷத்வாதி விசிஷ்டத்தன்மைப் பரித்தியாகத்தானே அவிருத்த சைதன்யத்தோடுகூட லக்ஷிய லக்ஷணபாவமாம். இஃதே பாகலக்ஷணை எனப் பகரப்பெறும்.

இவ்வாக்கியத்தின் கண் "நீலம் உற்பலம்" என்னும் வாக்கியம்போல் வாக்கியார்த்தம் பொருத்தமின்றாம்; ஆண்டு நீல பதார்த்தமாய நீலகுணத்தின் உற்பல பதார்த்தமாய உற்பல திரவியத்தின் வெண்மைப் படாதி பேத நீக்கத்தானே அன்னியோன்னிய விசேஷணவிசேஷ்யபாவ சம்சர்க்கத்திற்குமேனும், அன்யதா விசிஷ்டத்திற்கும் அன்யதாத்திற்குமேனும், அதனைக்கியத்திற்குமேனும், வாக்கியார்த்தத்வ அங்கீகாரத்தின் கண் வேறு பிரமாண விரோதமின்மையின் அவ்வாக்கியார்த்தம் பொருந்துகின்றது. ஈண்டோ தத்பதார்த்த பரோக்ஷத்வாதி விசிஷ்ட சைதன்யத்தின் துவம்பதார்த்த அபரோக்ஷத்வாதி விசிஷ்ட சைதன்யத்தின் பரஸ்பர பேத நீக்கத்தானே விசேஷண விசேஷ்யபாவ சம்சர்க்கத்திற்கும், அன்யதா விசிஷ்டத்திற்கும் அன்யதாத்திற்கும், அதனைக்கியத்திற்கும் வாக்கியார்த்தத்வ அங்கீகாரத்தின் கண் காட்சியாதிப் பிரமாண விரோதத்தான் வாக்கியார்த்தம் பொருந்துகின்றதின்றாம். (35) விகலசம் சர்க்கமேனும் விசிட்டமதேனு மீண்டுச், சகிதருவாக்கியார்த்தஞ் சம்மதமன்றதாகுந், தகுமகண்டைகமாகத் தரிரசத் தன்மையானே, மிகுதரு வாக்கியார்த்தம் விதுஷரினுடன் பாடாமே." என்று அஃதறையப்பட்டுளது.

---

(35) வாக்கிய விருத்தி—38.

ஈண்டு "கங்கையின் கண்ணிடைச்சேரி யிருக்கின்றது" என்னும் வாக்கியம்போல் விட்ட இலக்கணையும் பொருத்தமின்றாம். ஆண்டு, கங்கை யிடைச்சேரிகளின் ஆதார ஆதேய பாவவடிவ வாக்கியார்த்தம் முற்றினும் முரணுகின்றமையின், வாக்கியார்த்தத்தை முற்றினும் விடுத்து அதன் சம்பந்திதீரஇலக்கணைக்குப் பொருத்தமிருத்தலின் விட்ட இலக்கணை பொருத்தமாம். ஈண்டோ பரோக்ஷ அபரோக்ஷ சைதன்ய ஏகத்வ வடிவ வாக்கியார்த்தத்தின் பாகமாத்திரத்திற் பகை யிருத்தலின் பாகாந்தரத்தையும் விடுத்து அன்னிய இலக்கணைக்குப் பொருத்தமின்மையின் விட்ட இலக்கணை பொருத்த மின்றாம். கங்கை யென்னும்பதந் தற்பொருள் வீடலாற் றீர பதார்த்தத்தை எங்ஙனங் குறிப்பிக்கின்றதோ, அங்ஙனம் தற்பதமேனுந் துவம்பதமேனும் தற்பொருணீக்கத்தானே துவம்பதப்பொருளையேனும் தற்பதப் பொருளையேனும் குறிப்பிக்கலாம். ஆதலின், யாங்ஙனம் விட்ட இலக்கணை பொருத்த மின்றெனப்புகலற்க; ஆண்டுத் தீரபதங் கேட்கப்படாமையின் அதன் பொருட் டோற்றக்கால் இலக்கணையான் அதன்றோற்றுவிழை விருப்பினும், தத்துவம் பதங்கள் கேட்கப்படுதலின் அதன் பொருட் டோற்றமாங்கால், இலக்கணையான் மீண் டன்யதரபதத்தா லன்யதர பதப்பொருட் டோற்றவிழை வின்மையினென்க.

ஈண்டு "சிவப்புச்செல்கின்றது" என்னும் வாக்கியம் போல் விடாத இலக்கணையு மியையாதாம். ஆண்டுச் சிவப்புக்குணச் செல்லல்வடிவ வாக்கியார்த்தம் முரண்படுதலின் அதனைவிடாமல் அதற்குப் பற்றுக்கோடாய பரியாதி யிலக்கணையான் அதன்முரண்படல் னீக்கமலின் விடாத விலக்கணை யியையு மெனக் காண்க.

ஈண்டோ பரோக்ஷத்வ அபரோக்ஷத்வாதி விசிஷ்ட சைதன்ய ஏகத்வ வாக்கியார்த்தம் முரண்படுதலின் அதனை விடாமல் அதன் சம்பந்தியாய யாதாமோர் பொருள் குறிப்பிக்கப்படினும் அதன் முரண்படல் நீக்க மேலாதொழிதலின் விடாத விலக்கணை இயையாததேயாம். தற்பதமேனும் துவம்பதமேனும் தற்பொருட் பகையங்கிசந் தணர்தலான் அயலங்கிசத்தோடுற்ற துவம்பதப் பொருளையேனும் தற்பதப்பொருளையேனும் குறிப்பிக்கலாய்; ஆதலின் யாங்ஙனம் அயலாற்றால் பாக விலக்கணையி னுடன்பாடாமெனப் பகர்க; ஒரு பதத்தால் தற்பொருளங்கிச வயற்பதப் பொருளிரண்டின் இலக்கணை யியையாததாஹும், அயற்பதத்தால் அதன் பொருட்டோற்றமாங்கால் இலக்கணையான் மீண்டதன்றோற்ற விழைவின்மையி னானும் என்க.

ஆகையினுன் எங்ஙனம் "சோயந் தேவதத்தஃ" என்னும் வாக்கியமேனும் அதன் பொருளேனும் அக்கால இக்கால விசிஷ்ட தேவதத்த வடிவ வாக்கியார்த்தத்திற்கு அங்கிசத்தில் முரணிருத்தலின் முரணுய அக்கால இக்கால விசிஷ்டாங்கிசத்தைத் தணர்ந்து முரணிலதாய தேவதத்தாங்கிச மாத்திரத்தைக் குறிப்பிக்கின்றதோ, அங்ஙனம் "தத்துவமசி" என்னும் வாக்கியமேனும் அதன் பொருளேனும் பரோக்ஷத்வ அபரோக்ஷத்வாதி விசிஷ்ட சைதன்ய ஏகத்வவடிவ வாக்கியார்த்தத்திற்கு அங்கிசத்தில் முரணிருத்தலின் முரணுய பரோக்ஷத்வ அபரோக்ஷத்வ விசிஷ்டாங்கிசத்தை விடுத்து முரணிலதாய அகண்ட சைதன்ய மாத்திரத்தைக் குறிப்பிக்கின்றதென் றுணர்க.

மகா வாக்கியார்த்தப் பிரகரணம்

முற்றிற்று.

## 5. அனுபவ வாக்கியார்த்தப் பிரகரணம்.

இனி யிஞ்ஞான்று "அஹம்பிரஹ்மாஸ்மி" (யான் பிரஹ்மமா யிருக்கின்றேன்) என்னும் அனுபவவாக்கியார்த்தம் வருணிக்கப்படும். இன்னணம் ஆசிரியரால் அத்தியாரோப அபவாத வாயிலாய்த் தத்துவம் பதார்த்தங்கள் சோதிப்பிக்கப்பட்டு வாக்கியத்தான் அகண்டார்த்தமறியப்படின் அதிகாரிக்கு "யான் நித்தியசுத்த புத்த முக்த சத்திய சுபாவ பரமானந்த அனந்த அத்வயப் பிரஹ்மமா யிருக்கின்றேன்" என்னும் அகண்டாகார வடிவ சித்தவிருத்தி யுற்பன்னமாம். அதுவும் சிற்பிரதிபிம்பத்தோ டுற்றதாய்ப் பிரத்தியக் கபின்ன பரப்பிரஹ்மத்தை விஷயஞ்செய்து அதன்கணுற்ற அஞ்ஞானத்தையே பாதிக்கின்றது; அக்காற் படத்தின் காரணதந்து தாகமாங்காற் படதாகமாவதொப்ப அகிலகாரண அஞ்ஞான மழியுங்கால் அதன்காரிய மியாவுமழிதலின் அதனுள்ளடங்கிய அகண்டாகாரவடிவ சித்தவிருத்தியும் பாதிக்கப்படும். ஆண்டுப் பிரதிபிம்பித சைதன்யமும், விளக்கொளி இரவி யொளிவிளக்க ஆற்றலற்றதாய் அதனாற் குன்றியதேபோல், தானே யொளிர்வதான பிரத்தியக்கபின்ன பரப்பிரஹ்மத்தை யொளிர்விக்கும் யோக்யதையற்றதாய் அதனாற் குன்றியதாய்த் தனக்குபாதிபூதமா யிராநின்ற அகண்ட விருத்திபாதித மாதலின் ஆடியின்றாயின் ஆனனப் பிரதிபிம்பம் ஆனனமாத்திரம் ஆவதேபோல் பிரத்தியக் கபின்னப் பரப்பிரஹ்மமாத்திரம் ஆமென் றறிக.

இன்னணமாகவே, †'விருத்தி வியாப்யத்வ அங்கீ காரத்தானும்,'‡ பலவியாப்யத்வப் பிரதிஷேதப்பிரதிபா தனத்தானும், (36) "மனத்தானேயே காணத்தக்கது" (37) "எதுமனத்தான் மனனிக்கப்படாதோ" என்னு மிச்சுருதிகட் கவிரோதமாம்.

(38) "துரியநற்பொரு டன்னைப் பலத்திறுற் சுட் டொணுவென், றரிய நூல்புக லாரிய ரோதின ரன்பி ருனே" என்றும்,

"சேதனத்தின், மெத்து பேதமை மாய்ந்திடப் புத்திவிருத்தி வேண்டும்" என்றும்,

"சொயமிலங்குரு வாதலிற் றுன்னுறு சித்தின் போலி, பயனுறாது" என்றும்

அஃதறையப்பட்டுள்ளது.

ஜடபதார்த்த ஆகாரவடிவசித்த விருத்திக்குச் சிறப்புளது. அங்ஙன மன்றோ:—" இதுகடம் " என் னும் கடாகாரவடிவ சித்தவிருத்தி அறியப்படாக் கடத்தை விஷயஞ் செய்து அதன்கண்ணுற்ற அஞ் ஞானத்தை நீக்கும் வாயிலாய்த் தன்பாலுற்ற சிதா பாசனுற் சடமாய கடத்தையும் விளக்குகின்றது.

(39) " புத்தி யுட்செறி போலியு மோர்குடம் புக்கு நிற்கு, மத்தினுட்புத்தி யாலறியாமை யழிந்து போ

---

† விருத்தி வியாப்யத்வம்=கேவல விருத்திக்கு விஷய மாந் தன்மை.

‡ பல வியாப்யத்வம்—ஆபாசனேடு கூடிய விருத் திக்கு விஷயமாந் தன்மை.

(36) பிருஹதாரண்யகோபநிஷத் - 4-4-19.

(37) கேனேப நிஷத் - 1-6.

(38) ஸ்ரீபஞ்சதசி - 7-57-58-59.

(39) ஸ்ரீபஞ்சதசி - 7 - 58.

குஞ்,சித்தின் போலியினுற்குடந் தோன்றுறும்" என்று அஃதறையப்பட்டுள்ளது.

விளக்கொளிக்கூட்டம் இருட்கணுற்ற கடபடாதிகளை விஷயஞ் செய்து அதன் மாட்டுற்ற இருளைப்போக்கும் வாயிலாய்த் தன்னொளியால் அதனையும் விளக்குகின்றது எங்ஙனமோ அங்ஙனமென்றுணர்க.

**அனுபவ வாக்கியார்த்தப் பிரகரணம்**

முற்றிற்று.

## 6. சிரவணுதிப் பிரகரணம்.

இத்தகைய தன்வடிவ சைதன்ய சாக்ஷாத்காரபரியந்தம் சிரவண மனன நிதித்தியாசன சமாதியனுஷ்டானத்தினபேக்ஷையிருத்தலின் அவையுங் காண்பிக்கப்படுகின்றன:—

சிரவணமென்பது சட்வித லிங்கங்களால் அசேஷ வேதாந்தங்கட்கு அத்துவிதீய வத்துவின்கண் தாற்பர்ய நிச்சயமாம். இலிங்கங்களோ:—உபக்கிரமம், உபசம்மாரம், அப்யாசம், அபூர்வதை, பலம், அர்த்தவாதம், உபபத்தி யெனப் பெயருற்றனவாம். பிரகரணத்தின் கண் முதலினும் கடையினும் பிரகரணத்திற் பிரதிபாதிக்கப்பெறும் அருத்தத்தின் உபபாதனம் உபக்கிரம உபசம்மாரங்களாம். எங்ஙனம்:—சாந்தோக்கியத்தின் ஆறுவதத்தியாயத்தில் "(40) ஒன்றே அத்துவிதீயம்" என்று முதலினும், (41) "இதன்

(40) சாந்தோக்கியம் 6-2-1.
(41) சாந்தோக்கியம் 6-8-7.

வடிவ மிவ்வியாவும்" என்று கடையிலும், பிரகரணப் பிரதிபாத்தியமாய அத்துவிதீய வத்துவின் பிரதிபாதன மாமோ. பிரகரண மத்தியிலடிக்கடி பிரகரணப் பிரதி பாத்தியவத்துவின் பிரதிபாதன மப்பியாசமாம்; எங் ஙனம்:—சாந்தோக்கியத்தின் கண்ணேயே மத்தியில் (42) "தத்துவமசி" என்று ஒன்பது முறை அத்துவி தீய வத்துவிற் பிரதிபாதனமாமோ.

பிரகரணப் பிரதிபாத்யமாய அத்துவிதீய வத்து வின் வேறு பிரமாணத்திற்கு விஷயமாகாமை அபூர்வ தைபாம். எங்ஙனம்:—சாந்தோக்கியத்தின் கண்ணே யே அத்துவிதீயவத்துவின் வேறு பிரமாணத்திற்கு விஷயமாகாமையாமோ. (உபநிஷத் மாத்திர விஷயத்வ மெனவறிக). பலமோ பிரகரணப் பிரதிபாத்தியமாய ஆத்மஞானத்திற்கேனும் (43) அதனனுட்டானத்திற் கேனும், ஆண்டாண்டு கேட்கப்பெறும் பிரயோஜன மாம்; எங்ஙனம்:—சாந்தோக்கியத்தில் (44)" ஆசிரியவா னுய புருடனறிவன் அவனுக்கு (அச்சீவன் முத்தனு க்கு) அவ்வளவேதாமதம் எவ்வளவு பிராரப்தம் விட வில்லையோ, பின் விதேக முத்தியை யடைவன்" என்று அத்துவிதீய வத்து ஞானத்திற்கு அதனடைவு பிர யோசன மெனக்கேட்கப் பெறுமோ. ஆண்டாண்டுப் பிரகரணப் பிரதிபாத்தியத்தின் புகழ்ச்சி யருத்தவாத மாம். எங்ஙனம்:—சாந்தோக்கியத்தின் கண்ணேயே "(45) அப்பொருளை வினவினேனுகின்றாய் எதனுல்

(42) சாந்தோக்கியம்-6-8-7,

(43) அதனனுட்டானம்-ஞானனுகூல சிரவணாதி யனுட்டானம்.

(44) சாந்தோக்கியம் 6-14-2.

(45) சாந்தோக்கியம் 6-1-3

கேளாதது கேட்கப்பெறுமோ, நினையாதது நினைக்கப் பெறுமோ, அறியாதது அறியப்பெறுமோ" என்று அத்துவிதீயவத்துப் புகழ்ச்சியாமோ. பிரகாணப் பிரதி பாத்திய அருத்தசாதனத்தில் ஆண்டாண்டு கேட்கப் பெறும் யுக்தி உபபத்தியாம். எங்ஙனம்:—சாந்தோக் கியத்தில் "(46)எங்ஙனம் சௌமியனே!ஒருமட்பிண்ட வுணர்வால் காரியம் யாவும் மண்மயம் என அறியப் பெற்றதாம்; காரியமாயது வாக்கினாலாரம்பிக்கப்பெற்ற பெயர்மாத்திரத்துற்றது, மண்ணென்பதே யுண்மை யாம்" என்பதாதியில் அத்துவிதீயவத்து சாதனமாய விகாரத்தின் வாக்காற்றொடங்குன்மாத்திரத்தன்மையில் யுக்தி கேட்கப்பெறுகின்ற தாமோ.

மனனமோ, வேதாந்த அனுகுண (சாதக) மாய யுக்திகளால் கேட்கப்பட்ட அத்துவிதீயவத்துவின் இடைவிடாது தொடர்ந்து சிந்தித்தலாம்.

விஜாதீயமாய காயாதி விருத்தியின்றி அத்து விதீய வஸ்து சஜாதீய விருத்திப் பிரவாஹம் நிதித்தி யாசனமாம்.

சமாதி, சவிகற்பகமும் நிர்விகற்பகமுமென இரு விதமாம். அவற்றுள் சவிகற்பகமென்பது ஞாதுரு ஞானாதிவிகற்ப லயாபேக்ஷையின்றி அத்துவிதீயவத்து வின்கண் அவ்வாகார வடிவமாயசித்தவிருத்தியின் நிலை பேறாம். அக்கால் மண்மயக் கஜாதி புலப்படினும் மண் ணொளிர்வதொப்பத் துவைதம் பானமாயினும் அத்து விதவஸ்துவிளங்கும். (47)"திருசி ஸ்வரூபமாயதூஉம்,

(46) சாந்தோக்கியம்-6-1-4.

(47) உபதேச சகஸ்ரீ திருசி ஸ்வரூப பரமார்த்த தரிச னப் பிரகரணம்.

ககனோபமமாயதூஉம், பரமாயதூஉம், சக்ருத்விபாத வாயதூஉம், (ஒரு தன்மையானே விளங்குவதாயதூஉம்), அஜமாயதூஉம், ஏகமாயதூஉம், அலேபகமாயதூஉம், சர்வகதமாயதூஉம், அத்வயமாயதூஉம் ஆய ஏதக்ஷரம் அதனை சததம் யானாகின்றேன் விமுக்தனேனும்" என்று அதனைப் பெற்றுளது.

நிர்விகற்பகமோ ஞாதருஞானாதி விகற்ப லயாபே க்ஷையொன்றி அத்துவிதீய வத்துவின் கண் அவ்வா காரவடிவமாய சித்தவிருத்தியின் மிகுதியாய ஒருமைப் பாட்டானே நிலைபெறும் (விஸ்பஷ்டமாய் விளங்காமை யின் என்பது கருத்தாம்). அக்காலோ ஜலாகாரவடி வுற்ற லவண மொளிராமல் ஜலமாத்திரமா யொளிர் வதேபோல் அத்துவிதீய வத்துவாகார வடிவுற்ற சித்த விருத்தி யொளிராமல் அத்துவிதீய வத்துமாத்திரம் ஒளிரா நிற்கும். அதனானே இதற்குந் துயிற்கும் அபேத சங்கை யுண்டாகா. என்னை? இருபாலும் விருத்தி புலப் படாமை சமானமாயினும் அதன் உண்மை இன்மை மாத்திரத்தானே இவற்றிற்கு † வேற்றுமை புலப்படு தலி னென்க.

இதனங்கங்களாவன: இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தாரணை, தியானம், சமாதி யென்பனவாம். அவற்றுள்,

கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை, ஏலாமை, என்பன இயமங்களாம்.

தூய்மை, மகிழ்வு, தவம், வேதநூல் பயிறல், பத்தியா லீசற்போற்றல் என்பன நியமங்களாம்.

---

† துயிலின்கண் அவித்தியாவிர்த்தியின் உண்மையுள தெனினும் அந்தக்கரண விர்த்தியின்மையின், வேறுபாடுள தென அறிக.

கரசரணாதிவைப்புச் சிறப்பிலக்கண முற்ற பதுமம் சுவத்திகம் முதலன ஆசனங்களாம்.

இரேசக பூரக கும்பக இலக்கண உயிர்மீட்சியுபாயங்கள் பிராணாயாமங்களாம்.

தத்தம் விடயங்களினின்றும் பொறிகளின் மீட்சியே பிரத்தியாகாரமாம்.

அத்துவிதீய வத்துவின்கண் ணந்தரிந்திரியத்தை நிறுவுதலே தாரணையாம்.

ஆண் டத்துவிதீய வத்துவின்கண் சிதைந்து சிதைந்து உண்டாம் அந்தரிந்திரிய விருத்திப் பிரவாஹம் தியானமாம்.

சமாதியோ சாற்றிய சவிகற்பகமேயாம்.

இவ்வண்ணம் இதனங்கியாய நிர்விகற்பகத்திற்கு இலய விக்ஷேப கஷாய இரசாஸ்வாத வடிவ நான்கு விக்கினங்கள் உண்டாகின்றன.

இலயமென்பது அகண்ட வத்துவைப் பற்றுமற் சித்த விருத்தியி னித்திரையாம்.

அகண்ட வத்துவைப் பற்றுமற் சித்த விருத்திக் கயற் பற்றுக்கோடு விக்ஷேபமாம்.

இலய விக்ஷேபமின்றேனும் இராகாதி வாதனை யான் மங்கிய தன்மையானே சித்த விருத்தியின் அகண்ட வத்துப் பற்றின்மை கஷாயமாம்.

அகண்ட வஸ்துவின் பற்றின்றியும் சித்தவிருத்தியின் சவிகற்பகானந்தச் சுவைப்பு இரசாஸ்வாதமாம்: அல்லது சமாதியாரம்ப சமயத்தே சவிகற்பகானந்தச் சுவைப்பு இரசாஸ்வாதமாம்.

இந்நான்கு விக்கினம் நீங்கிய சித்தமானது காற்றற்ற விளக்கொப்பச் சலனமற்றதாய்ச் சதகண்ட சைதன்ய மாத்திரமா யெப்பொழுது நிலைபெறுமோ அப்பொழுது நிர்விகற்பக சமாதியென நிகழ்த்தப்பெறும். (48) "இலயத்தினின்றுஞ் சித்தத்தை தெளிவிக்க, மீண்டும் விக்ஷேபத்தைக் கெடுக்க, இரண்டினின்றும் நீங்கிச் சமத்தன்மையை யடையாத சித்தம் கஷாயத்தோடு கூடியதென அறிக; சமமடைந்த சித்தத்தைச் சலிப்பியா தொழிக; சுகத்தைச் சுவைத்த லொழிக; ஆண்டுப் பிரஞ்ஞையினால் நிராசையுடையனாய் ஆகுக;" என்றும். (49) "காற்றற்றதலத்தில் வைத்த தீபம் எங்ஙனம் அசைகின்றதின்றோ அஃது உபமையாக ஸ்மரிக்கப்பட்டுளது" என்றும் அஃதறையப்பட்டுளது.

சிரவணாதிப் பிரகரணம்
முற்றிற்று.

## 7. ஜீவன் முக்தப் பிரகரணம்.

இனிச் சீவன்முக்த னிலக்கண மியம்பப்பெறும்:— ஜீவன் முக்தனென்பவன், தன்வடிவ அகண்டப் பிரஹ்ம ஞானத்தால் அதனஞ்ஞான பாதனவாயிலாய்த் தன் வடிவ அகண்டப் பிரஹ்மசாக்ஷாத் காரமாங்கால் அஞ்ஞானம், அதன்காரியமாய சஞ்சித கர்மசம்சய விபர்யயாதிகட்கும் பாதிதத்தன்மை யுண்மையின் அகிலபந்தரகித பிரஹ்ம நிஷ்டனும்;(50) "இருதயக்கிரந்தி பேதிக்

(48) கௌடபாதகாரிகை-அத்வைதப் பிரகரணம் 44.
(49) பகவற்கீதை-6-19.
(50) முண்டகோப நிஷத்-2-2-9.

கப் பெறுகின்றது; சகல ஐயங்களுஞ் சேதிக்கப்பெறுகின்றன; இந்த ஞானியினது கன்மங்களோ நசிக்கின்றன; அந்தப் பராவரப் பிரஹ்மத்தைச் சாக்ஷாத்கரித்த அக்கால்'' என்பதாதி சுருதி யுண்மையி னென்றுணர்க.

இவனே சமாதியினின்றும் வெளிப்பட் டிருக்குஞ் சமயத்தில் மாமிச சோணித மூத்திர மலாதியின் பாத்திரமாய காத்திரத்தானும், அந்தத் தன்மை மந்தத் தன்மை சமர்த்தத்தன்மை சாமர்த்தியமின்மை முதலியவற்றின் பாத்திரமாய இந்திரியக் கிராம(கூட்ட)த்தானும், பசிதாக சோகமோகாதியின் பாத்திரமாய அந்தக் கரணத்தானும், முன் முன் வாதனையாற் புரியப்பட்ட கன்மங்களையும், புஜிக்கப்பட்ட ஞானத்தோடு பகையாத பிராரப்த பலன்களையும், கண்டும், பாதிதமாதலி னுண்மையாய்க் கண்டதின்றும். எங்ஙனம்:—இந்திர ஜாலமென்னும் ஞானவான், அவ்விந்திரஜாலத்தைக்கண்டும், பாமார்த்தம் (உண்மை) இஃதெனக் கண்டதின்றே. "கட்புல னுற்றவ னாயினும் கட்புல னற்றவன் போன்றே, செவிப்புலனுற்றவனாயினுஞ் செவிப்புலனற்றவன் போன்றே'' என்பதாதி சுருதியானுமறிக. (51) "கண்படை யுடையான் கடுப்ப நனவில் யாவன் கண்டிலனும் துவயத்தையே கண்டும், அத்வயத்தன்மையால், அங்ஙனமே ஆற்றியும் யாவன் நிஷ்கிரியனுமாவனே அவன் ஆன்மவித்தாம் அன்னியனன்று என ஈண்டு நிச்சயமாம்'' என்றும் கூறப்பட்டுமுளதெனக்கொள்க. இவனுக்கு ஞானத்தின் முன்னிருப்பனவேயாய ஆகார

(51) உபதேச சகஸ்ரீ திருசிஸ்வரூப பரமார்த் தரிசனப் பிரகரணம். 13.

விகாராதிகளின் றொடர்புபோன்று சுபவாதனைகளின் றொடர்பே யுண்டாம், அல்லது சுபாசுபங்களின் உதாசீனத்தன்மையேனு முண்டாம்.

"(52) அத்வைத தத்துவத்தை யறிந்தவனுக்கு இஷ்டப்படி சஞ்சாரங் கூடுமாயின் அசுசிபக்ஷணத்தில் நாய்கட்கும் தத்துவ தரிசிகட்கும் யாதுதான்பேதங் கொல்" என்றும், "(53) பிரஹ்மவின்மையைப்பாறி அங்ஙன மான்மாவிற்குக் குன்றாத காண்போனுந் தன்மையும் அங்ஙனங் கர்த்தாவலதாந்தன்மையும் அறிவனே அவன் ஆன்மஞ்ஞன் மற்றைய னன்றாம்" என்றுங் கூறப்பட்டிருக்கின்றன. அக்கால் அமானித்வாதிகளாய ஞானசாதனங்களும் அத்வேஷ்ட்ருத்வாதிகளாய சற்குணங்களும் அலங்காரம்போற் றொடர்ந்து துலங்கும் (54) "ஆன்மஞான முண்டானவனுக்கு நிச்சயமாய் அத்வேஷ்ட்ருத் வாதிகளாய குணங்கண் முயல்வின்றியே யுண்டாகின்றன; இவனுக் கவை சாதனவடிவங்களன்றாம்" என்றறைதறையப்பட்டுளது.

மிகைபடக்கூறலா லென்பயன்; இவன்றேகயாத்திரைமாத்திரைப் பொருட்டாய் இச்சையனிச்சை பரேச்சைகளாற் கிடைக்கப்பெற்றனவாய சுகதுக்க வடிவங்களாய் பிராரப்த பலன்களை யனுபவிப்பவனாய் அந்தக்கரண ஆபாசாதிகளை விளக்குபவனாய் அதன் முடிவில் பிரத்திபக்கானந்த பரப்பிரஹ்மத்தின்கண் பிராணன் இலயமாங்கால், அஞ்ஞான அதன்காரிய சமஸ்காரங்கட்கும் விநாசமெய்தலின் பரமகைவல்யமாய் ஆனந்

(52) நைஷ்கர்ம்ய சித்தி-4-62.
(53) உபதேச சகஸ்ரீபிரகாசப் பிரகரணம்-13.
(54) நைஷ்கர்ம்ய சித்தி-4-69.

தைகரசமாய், அகிலபேதத்தோற்ற ரஹிதமாய அகண்டப் பிரஹ்மவடிவமாய் நிலைபெறுவன்; " (55) அவனுடைய பிராணன் கிளம்புகின்றதில்லை".

" (56) ஈண்டேநன் குறுகின்றனன்" "(57) விமுக்தனாய் விடுபடுகின்றான்" என்பதாதி சுருதியினானுணர்க.

## ஸ்ரீசதானந்த பரமஹம்ச பரிவ்ராஜக

ஆசிரியரருளிச்செய்த

ஸ்ரீவேதாந்த சாராமிருதம்

முற்றிற்று.



(55) பிருஹதாரண்யகோபநிஷத்-4-4-6.
(56) ஷ்டி 3-2-11.
(57) கடோபநிஷத்-5-1.



உ

சிவமயம்.

ஸ்ரீ சதாசிவப் பிரஹ்மேந்திரர்

திருவாய் மலர்ந்தருளிய

# அத்துவிதரசமஞ்சரி.

இதன்

தமிழ் மூலமும் உரையும்

ஸ்ரீ கோவிலூர் மடாலயம்

ஸ்ரீ முத்துராமலிங்க தேசிகர்

பாதசேகரரான

ஸ்ரீ துறவாண்டவர் என்னும்

ஸ்ரீ அருணாசல தேசிகர்

பாதசேகரரான

ஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள்

அவர்களால்

இயற்றப்பட்டு,

திருக்களராண்டவ ரென்னும்

ஸ்ரீ வீரசேகர ஞானதேசிகர்

பாதசேகரராகிய

ஸ்ரீ சுப்பைய சுவாமிக ளவர்களால்

சென்னை, கோமளேசுவரன்

பேட்டை,

சச்சிதானந்த அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1913.

*Copy-right Registered.*

அத்துவிதரச மஞ்சரியின்

## பொருளடக்கம்.

1. ஸ்ரீ சதாசிவப் பிரஹ்மேந்திரர் சரித்திரச் சுருக்கம்.
2. கிரந்த சுலோகம்.
3. தமிழ்ச் செய்யுள்.
4. உரை.

# ஸ்ரீசதாசிவப் பிரஹ்மேந்திரர் சரித்திரச் சுருக்கம்.

சதாசிவப் பிரஹ்மமென்று பிரசித்திபெற்ற சதாசிவேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஓர் அரிய ஜீவன்முக்தர்; தென்னிந்தியாவில் இராஜயோக பரம்பரையிற் கடைசியாகத் தோன்றியவர். கரூர்ப்பட்டணத்தருகில் ஏறக்குறைய 150 வருடங்கட்கு முன்னர் வாசஞ்செய்தவர்; அத்தியயனகாலத்திலேயே மிக நுண்ணிய அறிவுடையராயிருந்தவர். காவேரி நதி தீரத்துள்ள திருவிசை நல்லூரென்னுங் கிராமத்தில் கல்வி பயின்றவர். அப்போது அக்கிராமத்தில் இராமபத்திரதீக்ஷிதரும், அய்யாவாளென்று பிரசித்திபெற்ற ஸ்ரீவேங்கடேசரும், மகாபாஷ்யம் கோபாலகிருஷ்ண சாஸ்திரியாரும் வித்தியார்த்திகளாயிருந்தனர். இயற்கையிலேயே நிரம்ப அறிவாற்றலமைந்துள்ள இவர்களினும் சதாசிவப் பிரஹ்மேந்திரர் மிகு சூட்சும அறிவுடையவராக விளங்கி வந்தனர். அவர் தமது வித்தியா குருவுடன் பல விஷயங்களைக் குறித்து வாதஞ் செய்வதாயிருந்தனர்; அவ்வமயங்களில் அவர் தமது குருவினும் மேம்பட்ட யுக்தி புத்தியுடையவராக விளங்கினர். அவரது வித்தியாப்பியாச முடியுங்காலத்தில் அவர் பத்தினி பருவமடைந்ததாகக் கேள்விப்பட்ட அவரது தாயார் அன்று விசேஷ போஜனம் சமைப்பதாயினர்.

சதாசிவப் பிரஹ்மம் வழக்கம்போல் வீட்டிற்கு வந்த காலத்தில் போஜனகாலம் மேற்சொன்ன காரணத்தால் தாழ்த்தது. தாழ்த்தது கொண்டு அவர் அடியில் வருமாறு யோசிக்கலாயினர்:—

சம்சார முளை கிளம்புவதற்கு முன்னரே போஜனகாலந் தாழ்த்தது; அது முளைத்தாலுண்டாந் துன்பத்திற்கோ அளவு கிடையாததாகும் என்றிவ்வாறு தீர்க்காலோசனை செய்து சம்

சார துக்கம் மிகப்பொல்லாததென்று அதை விடுத் துடனே ஞானகுருவை யடையப் பிரயாணப்பட்டனர். அன்று முதற் கொண்டு உலகத்திற் சிறிது மின்பமின்றென்று அதனை வெறுத்து உலகிற்றுன்பானுபவிகளாயுள்ள ஜீவர்களுக் கிரக்கங் கொள்வாராயினர். ஜாதி மத வித்தியாசமின்றி ஜீவ கோடிகளைச் சமபாவனையாகப் பாவிப்பதும், யாவர் யாது கொடுப்பினும் அதனை வாங்கி யுண்பதுமா யிருந்தனர். ஒருவரும் அன்னங்கொடாத காலத்தில் வீதியிலெறிந்து கிடக்கும் எச்சிலிலைகளிலுள்ள வற்றை யுண்பர். இவ்வாறொழுகு மிவரைக்கண்ட ஜனங்க ளிவருடைய அதிதீவிர பக்குவத்தை யறியாது இவரைப் பயித்தியம் பிடித்தவரென்று தீர்மானித்திருந்தார்கள். இவர் அதி விரைவாகப் பரமசிவேந்திர சரஸ்வதி யென்னுங் குருவை யடுத்து அவரிடத்து யோகாப்பியாசம் பயிலுவதாயினர்; விரைவாக வித்தையிலும் யோகத்திலும் தேர்ச்சி யடைந்தனர். இக்காலத்திற்றான் அவர் கிரந்தங்களுங் கீர்த்தனங்களும் இயற்றியிருத்தல் வேண்டும். இக்கிரந்தங்களுங் கீர்த்தனங்களும் அவருடைய கொள்கை யின்னதென்பதை நன்கு விளக்கும். ஆத்மானுபவத்தை யடைந்த யோகியின் கீர்த்தியை விளக்கிக் காட்டும் 62 சுலோகங்களடங்கிய ஆத்ம வித்தியாவிலாச மென்னுங் கிரந்தமும் அவற்றுளொன்றாம். இவர் தமது குருவினிடத்து வருபவரை யெல்லாம் பற்பல கேள்விகள் கேட்டு அவமானப்படுத்திக்கொண்டு வருவர்; அவ்வாறு வருங்கால் ஒருகால் குருவானவரிவரை யதற்காக வெகுண்டு எப்போது வாய் மூடுமோவென்று கூறியவளவில், அவர் தமது விவேகமின்மையை யுற்றுநோக்கி, அன்று முதல் மௌன விரத மேற்கொள்பவராய்த் தமது குருவை வணங்கித் தமது குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டி அவரது உத்தரவு பெற்றுப் பரதேசியாகித் தமது ஜனனப் பிரதேசத்தை விட்டு அமராவதியின் காவேரி நதி தீரத்திற் சஞ்சரிப்பாராயினார். ஆங்கு ஆத்மானுபவமீக்குறச் சமாதி புரிந்து வருவதும் விஷயமொன்றுமின்றியே உன்மத்தரைப்போற் றிரிபவருமா யிருந்தனர். ஆண்டுள்ள காடுகளிற் சென்று ஜனங்கட்குப்

புலப்படாமல் பல நாள் வெளிவராமல் சமாதி கூடியிருப்பர்; பலகால் நதியின் மணல் மேடுகளில்அறிதுயில் கொண்டிருப்பர். ஒருகாலவ ரவ்வாறிருக்கும்போது காவேரி நதியிற்றிடீரென்று பெருவெள்ளம் வந்து, அவரையடித்துக்கொண்டுபோய் மணலிற் புதைத்துவிட்டது. இதைக்கரையின் மீதிருந்த ஜனங்கள் கண்ணுற்றுத் தமது பூஜ்யரான யோகீசுவரருக்கு அபாயம் வந்துவிட்டதென்று கிலேசப்பட்டு அவரை மீட்கக்கூடாமல் வீட்டிற்குப்போயினர். மூன்று மாத காலங்கழித்த பின்னர் மழைக்கால முடிவாக, நதியில் ஜலம் வடிய, இராஜாங்கவேலையாட்கள் மணலை வாரத் தொடங்கினர். அவர்களுள் ஒருவன் தன் மண் வெட்டியை மணலிற்பாய்ச்சும்போது அது தடைப்பட்டது; அவனதனைப் பிடுங்கிப் பார்க்கும்போது அதில் இரத்தம் பட்டிருப்பதைக்கண்டு யாவரும் பயமும் அதிசயமுங் கொண்டு அவ்விடத்திற் சுற்றிலும் பெரும்பள்ளந் தோண்டினர்; தோண்டியபோது ஆண்டு சதாசிவப் பிரஹ்மேந்திரர் சமாதியிலிருக்கக்கண்டு பயபக்தியுடன் ஆச்சரியமுங்கொண்டு அவரைச்சமாதியினின்றும் பகிர்முகப்படுத்தினர். அவர் துயிலினின்றும் விழித்தவர்போல் எழுந்து தமக்கு யாதொன்றும் நேராதது போலத் தம் வழியே சென்றனர்.

பின்னொருகால் கரூரை யடுத்துள்ள ஒரு கிராமத்தில் ஒரு குடியானவன் தன் வயலிலுள்ள நெல்லை யறுத்து நேரமாய்விட்டமையின், அவ்விடத்திலேயே அம்பாரம் போட்டு இரவிற் காவல் வைத்து விட்டுப் போயினன். அன்றிராத்திரி சதாசிவப் பிரஹ்மேந்திரர் அவ்வழியேவர, இரவு மிகவுங் கறுக்கலாக இருந்தமையின், நெல்லம்பாரந் தடுத்தமைபற்றி யிடறி விழுந்து விட்டனர். இதனைக் கண்ணுற்ற காவற்காரர் நெல்லைத் திருடவந்த திருடனென்றிவரைக் கருதித் தடிகொண்டடிக்கக் கைகளை நோக்கவும் நோக்கிய கைக ளிறங்காமல் நின்ற இடத்திலேயே விடியற்கால பரியந்தம் நின்று கொண்டிருந்தனர். விடிந்த பிறகு யஜமானன் வந்தபோது அவனிடத்து வேலையாட்கள் நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லியபோது சதாசிவப்பிரஹ்மம் அவ்விடத்தை விட்டகன்றனர்; அகன்ற

போது வேலையாட்கள் தமது கைகள் கீழே யிறங்கத் துன்பத்தினின்றும் நீங்கி யுய்ந்தனர்.

மற்றொருகால், இராஜாங்க உத்தியோகஸ்தர்க ளவ்வூர் வந்திறங்கினார்கள். அப்போது தலையாரிகள் சமையலுக்காக அவர்களுக்கு விறகு கொண்டுவரக் காட்டிற்குப் போய் விறகு வெட்டிச் சுமைகளாக்கித் தங்கள் தலைமேற் றூக்கிக்கொண்டு ஒரு சுமை யெடுப்பதற் காளில்லாமையை நோக்குஞ் சமயத்தில், சதாசிவப் பிரஹ்மம் தற்செயலா யவ்வழி போவாராயினர். அவரைத் தலையாரிக ளிழுத்துக்கொண்டு வந்து விறகு சுமையை யவர் தலை மீது வைத்து அவரைத் தம்மோடு கூட யிழுத்துப்போயினர். தலையாரிகள் தங்கள் சுமைகளைக்குறித்த விடத்திற்போட்டனர். கடைசியில் சதாசிவப் பிரஹ்மமும் தமது சுமையை யவற்றின் மேல் போட்டனர். அங்ஙனஞ் செய்த உடன் அங்கிருந்தவரியாவரும் அதிசயிக்குமாறு அச்சுமைகள் தீப்பற்றி யெரிந்தொழிந்தன. இத்தகைய அற்புத மூர்த்தியாய் விளங்கும் இம்மஹா சித்தபுருஷரைச் சாதாரணஜனங்கள் பயித்தியக்காரரென்று மதித்திருந்தனர். சிறு பிள்ளைகள் அவரைப் பரிகாசஞ் செய்வதும் அவரைச்சுற்றி நின்று ஆடுவதும் பாடுவதுமாயிருந்தனர். அவரும் தமக்குக்கிடைப்பனவற்றை எவர்கட்கும்பகுத்துக்கொடுப்பர்; இவ்வாறிருக்கும்போ தொருநாள், அச்சிறுபிள்ளைகள் மதுரையில் நடக்கும் ரிஷபவாகனமஹோற்சவத்தின் மகிமையைத் தமது தந்தைமார் சொல்லக்கேட்டு அத்திருவிழாவைக்காணஆசைகொண்டு அதிவினயத்துடன் சதாசிவப்பிரஹ்மத்தைமதுரைக்கழைத்துக்கொண்டுபோய்த்தங்கட்கு அவ்வுற்சவத்தைத் தரிசிப்பிக்குமாறு செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். இக்காரியம் அசாத்தியமானதென் றவர்கட்குத் தெரிந்திருந்தும் பரிகாசமாய்க் கேட்டனர். அவர் அச்சிறுவர்களைத் தமது தலையிலும் தோளிலும் முதுகிலுமேற்றிக் கொண்டு கணப்போது கண்களை மூடிக்கொள்ளும்படி சொல்லினர்; மறு கணத்தி லச்சிறுவர்கள் கண்களைத் திறந்தபோது அவர்கள் மதுரையிலிருந்து ரிஷபவாகனோற்சவத்தைத் தரிசித்துக்கொண்டிருப்பதாகக் கண்டனர். அச்சிறுபிள்ளைகள் விரும்

புஞ் சிற்றுண்டி முதலியனவற்றை அவர்களுக்கு வேண்டுமான வரையில் கொடுத்து அவர்களைக் களிக்கச்செய்து பொழுது விடியுமுன் அவர்களை அவர்த மிருப்பிடங் கொண்டுவந்து சேர்த்தனர். விடிந்தவுடன் சிறுவர்கள் தமது தந்தைமார்க ளிடஞ்சென்று நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லிச் சிற்றுண்டி களையுங் காண்பித்தனர்.

இம்மகானுபாவர் மகாசிவராத்திரி, கோகுலாஷடமி முத லிய புண்ணிய தினங்களில் ஒரே காலத்தில் பல க்ஷேத்திரங் களி லிருப்பதாகவுங் காணப்பட்டனர். அக்காலங்களில் அவர் தமதிருப்பிடத்திலிருக்கக் காசி இராமேசுவர முதலியக்ஷேத் திரங்களிலிருந்து வந்தவர்கள் அத்திவ்ய தினங்களி லவ ரவ்வி டத்தி லிருந்ததாகவும் கூறுவாராயினர்.

படிப்பின்வாசனை சிறிதுமின்றிய ஒரு பிரஹ்மசாரி பிரஹ்மேந்திருடைய கிருபையைப் பெறுமாறு அவர் செல்லு மிடங்களிலெல்லாம் அவரைப் பின்தொடர்ந்து சொல்லுவா ராயினர். கடைசியாக அப்பிரஹ்மசாரிமீது இரக்கங்கொண்டு சைகையினுல் அவர் வரவில் திருப்திகாட்டி வந்தனர். ஒருநாள் பிரஹ்மேந்திரரை நோக்கித் தமக்கு ஸ்ரீரங்கத்திலுள்ள ரங்க நாதரைத் தரிசிப்பிக்குமாறு செய்யவேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். அங்ஙனமே பிரஹ்மசாரியைக் கண்ணைமூடிக் கொள்ளச் சொன்னுர். அவர் கண் விழித்தவுடன் ரங்கநாதர் சந்நிதியிலிருந்து ரங்கநாதரைத் தரிசிப்பா ராயினர்; சதாசிவப் பிரஹ்மம் அந்தக்கணமே அவ்விடம் விட்டு மறைந்து விட்ட னர்; பிரஹ்மசாரி அவரை யெங்குந் தேடிக்காணுமல் மெல்ல மெல்ல நெரூருக்குவரவும் சதாசிவப்பிரஹ்மம் அங்குச்சமாதியி லிருக்கக் கண்டனர். சில காலத்திற்குப் பின்னர்ச் சதாசிவப் பிரஹ்மேந்திரர் அவர்மீது கருணைகூர்ந்து சில மந்திரங்களுப தேசித்தனர். அவற்றினநுஷ்டான பலத்தினுல் அப் பிரஹ்ம சாரி சமஸ்த புராணங்களிலும் விற்பத்தியுண்டாய்ப் புத்தி மான்கள் நிறைந்த சபையில் வியாக்கியானஞ் செய்வாராயினர் அதற்காகக் கரூரில் அனேக ராஜாக்கள் பலவெகுமதிகளும்.

மானியங்களுந் தந்தனர். அந்நிலங்களை யவருடைய சந்ததியா ரிப்போதும் அனுபவித்து வருகின்றனர்.

பின்னொரு காலத்தில் பிரஹ்மேந்திரர் யதேச்சையாகப் போகுங்கால் மகமதியத் தலைவனொருவனிறங்கி யிருந்த மார்க்கமாகப் போவாராயினர். அவன் தன்னுடைய பத்தினிகள் சகிதம் தனது அறையிலிருக்கும்போது இவர் நிர்வாணியாக அவ்வழியிற் செல்வதைப்பார்த்து மிகவுங் கோபங்கொண்டு தனது கத்தியால் அவரது ஒரு கையை வெட்டி விட்டனன் பிரஹ்மேந்திரர் இதைக் கவனியாமலே தமது வழியேபோனார்; அதனைக்கண்ணுற்றமகம்மதியத்தலைவன் ஆச்சரியமுற்று அவர் மகானுபாவரென மதித்துத் தான்செய்த தீமைக்கஞ்சி அவர் பின்சென்றனன்; அவர் நெடுநாளைக்குப் பின்னர்த் திரும்பிப் பார்க்கவும்,மகமதியத்தலைவன் தம்மைத்தொடர்ந்து வருவதைப்பார்த்து அவனை நோக்கி அவன் வருங்காரணத்தைக் கேட்டனர். அவன் தான் செய்த குற்றத்தை மன்னிக்குமாறு அவரை மிகுதியாகப் பிரார்த்தித்தனன். அவருக்கு நடந்த தீமையின்னதென்று தெரியாமையின், அவன்சொல்லிய அப்போதுதான் அவருக்குக் கைபோனது தெரிந்தது; தெரிந்தவுடன் தமது மற்றோர் கையால் மூடமாகிய கையைத் தடவ அது வளர்ந்து விட்டது. மகம்மதியத் தலைவன் அளவுகடந்த ஆச்சரியமடைந்து அவரது ஆசீர்வாதம் பெற்றுப் போயினன். இவ்விர்த்தாந்தம் சதாசிவேந்திரஸ்துதியில் கூறப்பட்டிருக்கின்றது.

சதாசிவப் பிரஹ்மம் கோயில்களுக்குப் போவதுமுண்டு; மூர்த்தியைநோக்கி அர்ச்சனு மந்திரங்களை யுச்சரிப்பதுமுண்டு. அக்கால் ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒவ்வொரு புஷ்பம் மூர்த்தியின் சிரசின்மீது அவாந்தரமாய் வீழ்வதுண்டாம்.

சதாசிவப் பிரஹ்மேந்திர ரியற்றிய அற்புதங்கள் பலவுள. அவற்றில் சில இங்குக் கூறப்பட்டன. இவற்றை நம்புவது அசாத்தியமாயினும் அவற்றை ஜனங்கள் மறந்துவிடுவதில்லை. அவை கர்ண பரம்பரையாய் வந்துகொண் டிருக்கின்றன.

ஒரு சித்த புருஷருக்கு இவ்வற்புதங்கள் மிகு சுலபமாம். சதாசிவப் பிரஹ்மேந்திரரோ பரமசித்த மூர்த்தி; அவர் மனம் எப்போதும் ஆத்மாகார மாகவே யிருக்கும். அவர் உலக விஷயத்திற் சிறிதேனு மிச்சை யில்லாதவர். அவர் தமது சரீரத்தில் மண்ணும் சாம்பலுமே பூசிக் கொண்டு, இவ்வுலகம் தாம் பூசிக்கொண் டிருக்கும் மண்ணினுஞ் சாம்பலினுந் துச்சமானதென் றெண்ண முடையவர். அவ ரடைந்த சொரூபஸ்திதியை நோக்கி அவரதுகுரு அவரைத் துதிசெய் திருக்கின்றனர். அவர் கருத்து எப்போதும் பிரபஞ்சா தீதமாய் ஆநந்த மாகவே யிருக்கும். அவருக்கு உணவு முதலிய வற்றைப் பற்றிச் சிறிதுங் கவலையே கிடையாது. அவர் உலகத்தி லிருந்த போதிலும் புளிதருபழமு மோடும் போலப் புரை தீர்ந்த நெஞ்சுடை யவரா யிருந்தனர்.

இவர் 1738 ம் வருஷத்தில் புதுக் கோட்டையைச் சார்ந்த திருவரங் குளத்திற் கடுத்த கானகத்தில் திரிந்து கொண்டிருக்குங்கால் புதுக்கோட்டை யரசரான விஜய ரகுநாத தொண்டைமான் சக்ரவர்த்தி இவரைக் கண்டனர். தொண்டைமான் சக்ரவர்த்தியும் அதிக விரக்தி யுள்ள வராய்த் தமது காலத்தைப் பெரும்பான்மையும் அக்கானகத்தில் சமாதிபுரிவதாகக் கழித்து வந்தனர். இச் சக்ரவர்த்தி பிரஹ்மேந் திரரை எட்டுவருட காலம் விடாது தொடர்ந்து வந்தனர். அதைப் பிரஹ்மேந்திரர் நோக்கி அவர்மீது பிரீதியுற்று மணலில் சில உபதேச மொழிகளை யெழுதிக் காட்டித் திரிசிரபுரத்தைச் சார்ந்த பிக்ஷாண்டார் கோயிலில் வசிக்கும் தமது சகபாடியாகிய கோபால கிருஷ்ண சாஸ்திரி யவர்களிடம் மேல் நடக்க வேண்டிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளுமா றாக்கியாபித்தனர். அவர் அங்ஙனமே, சாஸ்திரியாரைத் தமது சமஸ்தானத்திற்கு வரவழைத்து அவருக்கும் அவருடன் வந்த பிராமணர் களுக்கும் மானியங்கள் விட்டனர். அக்கா -லேற்பட்ட செப்புச் சாசன மின்னு மிருக்கின்றது. தசரா பண்டிகையும், தக்ஷிணா மூர்த்தித் திருவிழாவும் சதாசிவப் பிரஹ்மேந்திரர் கட்டளைப்படி நடத்தப் பட்டன. சதாசிவப் பிரஹ்மேந்திரர்

எழுதிக் காண்பித்த விடத்தி லுள்ள மணலை அரசர் கொண்டு போய்த் தேவஸ்தானத்தில் வைத்துப் பூஜித்து வருவாராயினர். அஃது இப்போதும் பூஜிக்கப் பெற்று வருகின்றது. சதாசிவப் பிரஹ்மேந்திரர் புதுக்கோட்டைக்கு வந்த நாள் முதல் தேசம் செழிப்படைந்ததுடன் தொண்டை மான் சக்ரவர்த்திகளும் கீர்த்தியும் பெருமையு மடைந்தனர். இக்கானகத்தில் இவர் நெடுங்கால மிருக்கவில்லை; ஆனால், யதேச்சை யாகத் திரிந்து கொண் டிருந்தனர். அப்படித் திரியுங் காலத்தில் ஐரோப்பாவிலுள்ள துருக்கிதேசம் (Turkey) வரைக்குஞ் சென்றனர். பிறகவர் நெடுங்காலம் சமாதியி லிருந்தனர். அப்பா லொருநாள் அவர் யான் மிதுனரவி ஜேஷ்டசுத்த தசமியன்று பரிபூரண மடைவே னென்றும், அன்று காசியி லிருந்து ஒரு பிராமணன் பாணலிங்க மொன்று கொண்டு வருவானென்றும், நெரூரிலுள்ள பிராமணர்க ளிடத்துச் சொல்லினர். மேலும், அந்தப்பாண லிங்கத்தைத் தமது சமாதி பக்கத்தில் பிரதிஷ்டை செய்து கோயி லொன்று கட்டும்படியும் ஆக்கியாபித்தனர். குறிப்பித்த நாளில் காசியி லிருந்து ஒரு பிராமணன் பாணலிங்கத்தைக் கொண்டு வந்தனன்; அன்று சதாசிவப் பிரஹ்ம மேந்திரர் தமக்குத் தோண்டிவைத்த சமாதியில், தாமே யிறங்கிப் பரிபூரண மடைந்தனர்.

அவ்வூரிலுள்ளார் சமாதிகட்டி அதன் பக்கதில் கோயிலையுங் கட்டிச் செய்யவேண்டிய கிரியை யெல்லாவற்றையுஞ் செய்துமுடித்தனர். இவர் அதே காலத்தில் மூன்றிடத்திற் சமாதியாயினரென்று சொல்லப்படுகின்றது; ஆனால், நெரூரிலுள்ள சமாதிதான் தென்னிந்தியாவிற் பிரசித்திபெற்று விளங்குகின்றது. அந்தச் சமாதிக்கும் கோயிலுக்கும் வேண்டிய செலவிற்காகத் தொண்டமான் சக்ரவர்த்தி விஸ்தாரமாக மானியம் விட்டிருக்கின்றனர். இப்போதும், சதாசிவப் பிரஹ்மேந்திரர் குருபூஜை வருடந்தோறும் புதுக்கோட்டை ராஜாங்கத்தாரால் நடத்தப்பட்டு வருகின்றது.

தொண்டைநன்னாடு சான்றோருடைத் தென்றபடி இவ்வரிய மகாத்மா தொண்டைநன்னாட்டில் வாசஞ்செய்து தம்

முடைய ஞான சீலமிகுதியால் விளங்கியிருந்தனர். யாவருமவரை அப்போதன்றி இப்போதும் பூஜித்து வருகின்றனர். பூஜ்யராய் ஸ்ருங்ககிரியி லெழுந்தருளியிருந்த ஜகத்குரு சச்சிதாநந்த சிவாபிநவ நரசிம்மபாரதி சுவாமிகளவர்களும் சதாசிவப் பிரஹ்மேந்திரரைப் பூஜித்திருக்கின்றனர்.

இப்பிரஹ்மேந்திரரை ஜகத்குருவே துதித்தாரெனின் நாம் அவரது பெருமையையெடுத்துச் சொல்லுத லமையுமோ?

சதாசிவப் பிரஹ்மேந்திரர் திருவாய் மலர்ந்தருளிய கிரந்தங்கள்:—

1. பிரஹ்ம சூத்திரவிருத்தி.
2. பன்னிரண்டுபநிஷத்துக்களுக்குத் தீபிகைகள்.
3. ஆத்மவித்தியா விலாசம்.
4. அத்வைதரசமஞ்சரி.

ஸ்ரீ சதாசிவப் பிரஹ்மேந்திரர்

சரித்திரச் சுருக்கம்

முற்றிற்று.

குருவே துணை.



# अद्वैतरसमञ्जरी.

वन्दे कुञ्जरसारव्य-
वृन्दकास्यं महेश्वरम् |
इन्द्रादिसंस्तुतं
[illegible] ॥ ॥१॥

[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ॥३॥

अद्वैतमेव [illegible] विवेक्त्रा—
[illegible] |
अद्वैत [illegible]
[illegible] ॥४॥

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ॥५॥

ஶாஸ்த்ராதிஷாய நவதா பாராஷோத்தமேந
ஸ்வராவ்யே நிஜபதம் பரதேஶிகோத்ரா
சோரேராரணாஸ்ரணீஜ்ஜிதேந பாம்ஸா
தேஶோ நிஜோ ஹி தஹஹிஜ்ஜுமிரேவ மஸ்ய: ‖
ஹம்ஸா ஹஸந்தி மாராலவ நிஷ்வணைஹி:
கத்ருத்ருதா மஹதி விஷ்ணுதி ஹம்ஸஹாவ: ।
ராஜாத்மஜஸ்ய நிஜதக்வநிபோயநேந
வ்யாயாத்மதா விமஹநாதிவ ராஜஹாவ: ‖
கலிடஸ்யநித்யஸாவபோயதநா: ப்ரதீவ:
பஙோ விஜோவநஜிதி ஹ்ரஸஹாவிருபாவஸ: ।
வஙாவஸாதவஸ்ய வவாராதிமாணப்ரவஞ்ச
தக்ஷவஞ்சதாவ ஸாதாரம் வரிக்ஷ்வேநவ ‖
க்ஷுவாதத: ப்ரதிஹயா ஜமஹஸ்திவாஹ:
ஸஸ்யக்நிராலவணவியளநஹிகிஞ்சித்ஸ்தி ।
ஹீரோவிஷஹாதி திஜிரம் வரிதஃ விபுராவ:
தமேத்ருவதீவக்ஷுகா நயநே கிஸஸ்தி ‖ ௩ ‖
விஜ்ஞாதிரேவ ஜமஹாத்மதயா வகாஸ்தி
வஸ்வஞரம் கிஸவி நாஸ்தி விசாயஷாணே ।
ரஜ்ஞோ: ஹ்ரஸாதிகாரணாஹவி ரஜ்ஞாஸவஷ—
ஸ்தவாஞரம் ஹவிதாஸஹ்ருதி கிம் கமஞ்சித் ‖
விஶ்வம் ஸஸ்தஸவி விஹ்ரஸாத்ருஷேத—
ஹாமேத்மவ ஸஞயஸநந்யஸாவப்ரகாஶ: ।
ஸம்ரேத்ரவவிஶ்வஸவிஸத்யஜிதீ ‡க்ஷ்யதேவெச
கொநாஸ ஶாக்திரஜதேந யநீஹவேஞா ‖

‡ ஷ்யதெ என்றும் பாட முளது.

நாஸ்தி ஷ்ருதீந்த்ரவஸரெ நவாரா நவஸ்வா—
ஶாஸ்வபூஜெவ தநஹாதி தயாவி விஶ்வம் ।
யஷ்வாக்ஷிஶஷ்ஞாதஜிவெஹ ஶஹெநூரஜாஷு
ஶாயாவிகஷ்வீதஶவி ஷ்ருதிஹாஸதெஹி ॥கூ॥

வணகொாஶவி ஸஜயஶெநகதயா விஹாதி
ஹஶாஸ்வகஷ்வீததஶ: வடஷூாநஷம்மாஸ் ।
ஜநூஷ்வீதீயரஹிதொாஶவிச ஸஷ்வீதீய
ஹாவெநஹாதிவாராஷஸ்ர நிஜாக்ஷிஷொஷாஸ்
ஶூஶொக்ரதாம் ஹவநவக ஶஷூாதவக—
ஶத்ரஞவிஹ ஶவிஜர்ஹிதஶஷ்யிரஞ ।
ஜெஷவாஸ் ஹ ஶஸ்ர விரதள ஸஶவஷ்யிதாயா-
ஞாஶொக்ரதெக்ஷிஷுவாரெவவாநஷ்தஷெவ ॥

மஙவபூவத்தநஜிஶஜமஷவ்ரவஷ்யம்
ஜெதந்ர நாஶநிஷிஹாயஷிநஶ்வகாஷ்தி ।
விதேந்ராதஜெ யஜிச விஶ்ராஜிவாஷ்வீஶ்ரா
ஸஶ்ரஷ்திரொஹவதி ஸவபூஜிஶஞயெவ ॥
ஶூரொவிதஸ்ர ஜமத: ஷ்ருவிஷூாவநெநந
விஸ்தம் ஶிவாஷ்டகதயா வஶிஶிஷ்ரதெ ந: ।
ஶத்ருஶநிஹத்ரஹதயஞாரயொநிவாதா—
ஶம்யஷ்வீவொ ஹவதி கெவஷுஶஷ்வீதீய: ॥ ॥கரு॥

சுஶ்ராஸ்தஶேதா வவாராஶஶிதாரஶாஸ்தாம்
கஸ்தாவதாவி ஶஶ ஜிஶ்வவாஷொ விஶெஷ: ।
காம்ஹெவிநஶ்ரதி ஜிரம் ஸஶவஷ்யிதெவா
காஷ்ஹாஶ்வரஸ்ரநஹி கொாவிவிஶெஷஷுஶ: ॥

ஸம்கல்பா த்ர ஸாவிகல்பி தசம்தத்வி ஶம்
விஶங்ஸத்ரீதி சம்ஹதி சநுபாஜி:|
ஶிஙா ப்ரக்ஷஜநிதாம் வநிதாம் விஶிக்ஷா
ஸெஸெதி வஶுதி யயா ஶிரவிப்ரயாக்த: ||
ஸவ்யெ உயி ஸர்வஸஸத்ரஸாவாவபொபெ
வ்ராஜொஹரெதாஜமஶிதி வ்ரவஶிஶ்ரெதயக்ஷ|
க்ஷந்ரத்ர கா த்ரவிக்ஷப்ரஷ்டசரமவாரமவ—
சஸ்யா நவித்ரஶிதி நிஶ்பிநாசஸ்தெதக்ஷ ||கஎ||
ஶ்ருஙா்ரதீகஸ்மாரணஹெதிரொஹிதொஉவி
ஶிஙாதாரொகரஸதா நஜஹாதிஜாதா |
நாநாவர்ணாவர்ணவிவித்ர * விவித்ரைதொவி
ஶித்ர: வபொ நவபஹாவசவாஸ்ரதிஸ்வ||
ஸச்சிக்ஷஸாவாதசவண்ணிதசாததக்ஷம்
சநெத்ர கஶ்பிஷஹஶித்ரதிநிஶ்பிதாயு: |
ஜெஹெஹ்ரீ யாஶிகசவி ஹ்ரு சவாஸநாஹி:
ப்ராஸ்த்வா சசாஹஶிதி யஷஷவிஷதாதா || ||கஅ||
விஶ்வம் ஷ்ரஷா விரஸஶித்ரவயீயு வெயுா
ஷாஸ்வாஷ்ரதெ சா நிஹிரஙரஸளரஸாதா|
உச்சாவசம் சரசரீ ஶிரஸந்நிரஸ்ர
ஸம்வெஸ்ரதெஸாசதிஹிஸ்ஸாரஸிஙாவரர:
ஸகாஙஸ்நிஹிதஷீஷ்ரஶசாததக்ஷம்
ஜொகா விசமைசதயொ பாத! நாஶ்ரீயஞெ|
ஶ்ருகாஶமொவரசஶெஷஜமக்ஷ்ரகாஶம்
வமகா நஹாஸ்க்ரசாஷீக்ஷிதாசாத்ஸஹஞெ ||

---

* வஶித்ரு என்றும் பாடமுளது.

ஶாந்தவிஸ்மாரணார்ணவமஹஸி ப்ரஹ்மண்ய—
மந்த்ரம் விஹாய பரிதாபமுபைதி மூட:।
தீவாழிஷ்ட ஸ்வபாஷ: பரிதப்யமானாம்
மாயாம் விமாஹ்யபரிமாஹ்யதிகிஞ்சனாய:॥
மாயா ஸ்வகீயவியதாதிவிகாரஜாதை—
ர்மாத்ரானமந்யயிதாஞஹவத்யஸம் ச।
ஶூயாரபாஷ்கரபசுராஶகமம்பாயாரா
ஸ்வீயை:கிமாத்ருயிதாமஹ்ருதிஶீகாரளவை:
ஶூஹாஸமா த்ருதநவொ ஜடதீவிகல்பா:
மாஞஸ்வ்யஶஞ்சவி நிரஸ்தஸமஸ்தஸம் ச।
ஶூரொவிதா மஞிநதா ழிவி வித்ருயமுா:
ஞிம்பஞ்சி கிஞா?விமஞம் வியசுஞாராஜு॥௨௩॥
ஸ்வப்நஸாஷஸ்தியம ஜாக்ருழிதிஹ்யபஸ்யா—
ஸ்திஸொ்ரவிஶஸ்வசுசுயாஸ்தமயொராவொதா:।
நிமஜ்ஜாக ராஜயஜவொரமராஜஹொமெ
மயொ்யவஸாக்ஷிணிவிஹாம்த்யநாவதமாநெ॥
ஸ்வப்ந:ப்ரஜாக்ருழிதி ஶவுக்ருதொ விஶெஷ:
மாயாமயகவமாஹயொரவிதாத்யவெ।
ப்ரத்ய்வகாராமிதி ச நாமக்ருதொ விகல்ப:
ஸத்யாவபொயஸாவதா தாதயொ:ஸ்வரமெவ ச
விஶ்ராந்தவாஹ்யவிஷயப்யஸநாநாவஙா,
ஸவெஞிருயொவரமஶாஞ்ஜமஜ்ஞிகல்பா:।
ஸ்வாநநமாத்ருபரிஶெஷிதவெதஸொயெ
தஜாக்ருதொபந்நாஹவஞிஸாஷாஸ்த்யவஸ்யா ச

कस्तेऽस्ति कायिकविचेष्टतदप्युनो दं
गृह्णञ्छिचेक्ष्क्षियदैव तथा भवाब्धि ।
वारिप्लवोऽयमिति वारमयी गृहीत—
श्वभ्रस्थया नहि चलाम्बुदसन्निकृष्टः
धिया समूलसतानाथ जगतीविचित्रं
भातावतापि दृढदक्षविदो नहानिः ।
स्वप्ने भयंकरगजादिनिरीक्षणेऽपि
नस्वाप्निकस्य दनुसदयतोऽस्ति भीतिः ॥
अत्यन्तदृढसदि $ त्यपि च प्रपञ्च—
सङ्घात्तदुष्ट नव तत्त भव मोकः ।
नास्त्यत्र वक्त्रिति निश्चितवानविद्या—
मात्त भव दाकारं दावदशनाय ॥१६॥
उद्बोधयितोऽपि कपिंल कपिंल ज्ञनन्ना
निद्रामुसमुपशारिपाविदितानृहावः ।
क्रोकयलवि † पहिजनमदिनिद्राम—
दत्तःकयापि कमया न पश्चित्तोऽस्ति ॥
दृश्ये स्फटीभवति नेष्टत भष हेतो
हेतोर्न स्फटीभवति नेष्टत भवदृश्ये ।
श्वीवाङ्गरे स्फरति हेतिरियहदृश्ये
हेतुर्धने स्फरति तत्र तथा वियाने ॥
पोयशनिरवचयं पृथिवदृतोने
विश्विदते हृदि तदा विरमहो तोऽपि ।

---

$ त्यक्रद्व என்றும் பாட முளது.

† दृश्या என்றும் பாட முளது.

அதோ கலாபிர் நவாஸாயேபாதே
ஸதீலவத்ஸ்வோ ததைவ ஸஹஸ்ரகாஸ: ॥௧௨॥
ஸ்ரஹ்மாண் ஸ்ஸுதிர்வஸநிர்லிஸ்பிதே: ஸ்வீதோ:
கஸ்யா நாம் யிவியமோ விஸ்வீலவஞ்சி।
விகோவஸிஷ்டாயாய நவாநத்யே
¶க்ஷீநஸ்வாகவிஷயா வியய: க்ஷ ஸஞ்சே॥௧௩॥
ஸவக்த்ரதாஸ்வ மதோ ஹி ஸ்நிலஸ்ஸாயிம்
வஸ்வக்ந் வ்யக்த்ரியதேஸயாவந்தேஸ்ய:
வயஸ்வஸ்ஸவக்ஷிவ: க்ஷிதிவொஷ்வி காஞ்
நியக்வணாய ஜுஷதே வதாம் மஸேவ॥
ஸ்ரக்ஷஸவக்ஷிதஸவக்வியஸ்வ்யக்தி—
ஸாநடியஞ்சி நிமஸாஹிஸ்தா நிஷேயா:।
வ்யாவாஸா க்ருவிஸ்வஸ்ய ஸஹஸ்ரஸஸ்ய
ஸாம்ஸிக்வ்ய வஸ்ரதாநி ஸதேநாஹாராணி॥
தக்வாந்தீக்ஷநவரோ ஸ்நிஸாவகூளஸோ
ஸம்ஸ்தோதா வ்யவஹாரணவி நாநாயோஜ்ய:॥
ஸாஸ்ராஜ்யேஸ்ஸ்யஹி யதாஸி வதஸ்ரா:
ராஜா வ்ரஜாஹிர்நயோக்ரஸ்யக்ஷ் ணவ॥
வஸ்ரோத்ராஜிக்தஸ்ஹாஸ்ஹகஸ்க்ஷீஸேஸ்வ:
ஷ்ம்வஷ்வ்வ நஹவேக வாஸாயஸ்ஷ்ட்ஷே:।
ஜாதஸ்ஷ்ரஸ்ய வநவஷ்ஜ்ஞாஹிஷேகே—
ரக்த்யஷ்ணாவி வநஸ்வஸ்யஸ்ருஷிஹாநி:॥
ஸ்ரப்ஜாஸ்யிகஸம்வஷ்ஸாவஷ்வா
ஹ்ஞாநணவஸ்ஸ்ஷ: வஸிஸ்ஷிஸேதி।

---

¶ க்ஷீணஸ்ய என்றும் பாடமுளது.

கிம்வா ஹித்வாஞ்ஞிகக்ருஹீ தத நாஹஹூ ஜம்ப:
தச*விம்ஸக்ஞா நவி யிம்வரிஹத்ஹூ ஷிஷெ ‖
வூாரவ்யக்ஷகூவரிவாகவஶம்வதெ ந
க்ஷிஶாந்தி நிஶ்சிதவாராவியிராத்வெவகீ ।
ஞாஸாஞஸாப்புவரிஸாணவிகூஷ்ணீநா
ஸதெஸ்யவகம் நஹிவிஷீகதி கா:விதொஸவி‖
அஞவஹிஶ்ச வரஸாயுதயா நாவஶ்ரூ—
ஞக்ஷிகூதெ வ்யஸநஸாக்ஷஸவ்ரூவெத: ।
யீர:க்ஷிஹவஸாவெ விஜயெயகஷ்ரவி:
வூத்ரஶீஹி:வூகூஷிதொஸவி நவிக்ஷவஸ்யாச
வூாவஞிகஸ்தாவிலவ: வரஸாஹூதொஸவி
யீரஞாரஜயதி கூஷ்டிதகீயதகவ்டு।
ஷ்ரீவெஷஹவிஷிததநா: வாராஷெஷாவிஶா
தெவெஷ:
தச்ஜதுயாவா நஸவிரஜயிதாம்ஹி நாஶ்டு‖
அஞநிபுரஞர நிரவிஸநிஜாதததெவா
நவூாமிவ வ்யஸநிதாம் விஷயெஷா யதெ்த ।
ஹாப்ராச காதஶ்சிகவி ஶ்யுநியிஸுநவ
கிம்வவிவபுவச்கஷவணதாஸாரீகரொதி
அஸ்யக்ஷிதவ்யஸஹிஸாநஸஶம்க்ஷி யாவ—
காஸ்யாத்ரிகா:ஶாஹபாணா:வ்யயஸாவிஶஞி ।
வாயீநிதெ வாஹூரஷி ராஜநி தவஸ்ஹூத்ரா
வணதெவிசவ்யயஸாவெதூதஸாஶ யஞெ‖௪௩‖

*க்வாத்ய என்றும் பாடமுளது.

அஜ்ஞாநஸ்யைவ நகாரதோ ஜகத: ஸ்ருஷ்டிஸம்ஹரா
ஜீவேஶைக்யவிகல்பகல்பிதார்தர்தர: ।
நாநாஶ்ருதி ஸ்ம்ருதி ஶைவ ஸாரஸ்வதஸாரம்
ப்ரஹ்மைவ கேவலமஹம் பரிகீர்ணஸுமங்களம்

ஸாராஸ்வாதவிலாஸித
ஶ்ரீ வித்யா நிவாஸத: ।
பராநந்தோதயோத்ரு
பத்யபாதாப்யநுஜ்ஞயா ॥

நிர்மாஸ்யமீப்ஸயைவ
அத்வைதரஸமஞ்ஜரீ ।
அந்தஸ்தாபவைஶாவிஶ்வஶிஷ்ய—
ஶ்ரோத்ருணாம் ஹ்ருஹ்ருதாம் ॥

ஸதஸோமஸஜ்ஜனஷய
பாதாம் கடாக்ஷைர்பரிஷ்டாஹாவஸமஸ்த
விரசஸம்ஸ்ருதமாப்திகாம்
விஶ்தாரதித்ருஷ்டகவி: கரோ ஸாரயி
அத்வைதரஸமஞ்ஜரீ பரிபூர்ணா

ஶிவம். ஶிவம். ஶிவம்.



# அத்துவிதரசமஞ்சரி

## மூலமும் உரையும்.

### அவதாரிகை.

சதாசிவப்பிரஹ்ம மென்னுந் திருநாமமுடைய ஆசாரியர்
* பரமசிவாநந்த ரென்னுந் தமது குருப்பிரசாதத்தினாற்
பெற்ற சுவானுபூதியை யுலகத்தின்கண் ணெல்லோ
ரும் பெற்றுக் கிருதார்த்தர்களாக வேண்டு
மென்றுள்ள கிருபையினால் அனேகம்
பிரகரணங்களைச் செய்தனுக்கிரகித்
துப் பின்னொரு சமயத்தில்
இலயவிட்சேபாதி நிவர்த்
தகமாயுள்ள நிருவி
கற்ப சமாதி
யனுஷ்
டானத்திற்
சுபாவமாய்விளங்கா
நின்ற அகண்டைக ரசானு
பூதியினால் நிரதிசய திருப்தி
யடைந்திருக்க முமூட்சு ஜனங்களி
னது புண்ணியபரிபாகத்தையே விக்கிரக
மாகத் தரித்தெழுந்தருளிய விக்கினேஶ்வர
மூர்த்தியினது ஆக்ஞையினாலாரம்பிக்கப்பட்ட அத்
துவிதரசமஞ்சரியென்னும் பிரகரணஞ் சம்பூர்ணமாகும்
பொருட்டு பேதா பேதப்பிராந்தி நிவர்த்தகமாயுள்ள
அத்விதீய சொரூபத்தையே கணபதி யாகத்
துதி செய்தல்.

---

* பரமசிவேந்திர சரஸ்வதி.

சீராரு மத்துவித மேயுண்மை யென்றுமிகத் தெருட்டு தற்குப், பாராருங் கயவுருவ நரவுருவம் புணர்வடிவம் பரிந்து சாத்தி, யோருநம் வரமோருந்த நல்தும்விக்கி னேசனென திதயத்தின்பா, னோராரு மத்துவிதந் தனையறியும் விசேட மேலா நிகழ்த்து வானே. 1

பொழிப்புரை—இயாதொரு பரமேஶ்வரன் றனது யோகமாயா வைபவத்தினுல் வியாகிருத அவ்வியாகிருத ரூப மான சகலப் பிரபஞ்சத்தையு நிர்மாணஞ் செய்து வேதப் பிர மாண பூர்வகமாக வன்ணாச்சிரம தர்மாதி நியமங்களையும் பிர் காசிப்பித்து சிவ விஷ்ணுவாதி மூர்த்தியாயும் பிரகாசிக்கிறரோ அந்தப் பரமேஶ்வரனே அத்வைத ஆத்மஞானனுபூதி விக்கினங்களெல்லா நிவர்த்திப்பித்து வேதார்த்தமான பரமாத் வைதானந்தானுபூதியை முமுட்சு ஜனங்களுக்கு விவேக பூர்வகமாகப் பிரகாசிப்பித் ததனை யடைவதற்கு நைட்டிக பிரமசரியாதி விரதமே சாதனமென்று காண்பிக்கும் பொரு ட்டு நராகாரத்தையும் விவேகி புருஷன் மிருகம் போலே சஞ்சரிக்கவேண்டு மென்பதைத் தெரிவிக்கும் பொருட்டு மிருகாகாரத்தையுங் கொண்டெழுந்தருளி வந்த வரதாகிய விக்கினேஶ்வரரானவர் பரமாத்வைதானுபூதிப் பிரதானமா யுள்ள சகல சுருதி யுத்தி யனுபவங்களையு மெனதிருதயத்திற் பிரகாசிப்பிக்கக் கடவர்.

கருத்துரை—சஜாதீய விஜாதீய சுவகதபேத ரகிதமான அத்விதீய ஸ்வரூபமே தானுயிருந்துள்ள வுண்மை வஸ் திது வெனக் காட்டும் பொருட்டும் அதனையடைந்த யோகிபுரு ஷன் பேத பாவமின்றிச் சிதாகாசனய்ச் சஞ்சரிப்பனென்ப தின் பொருட்டுங் கஜமுகக் கடவுளை திருஷ்டாந்தமெனக் கூறியதாம். 1

(அ-கை)

இஷ்ட தேவதாத்துதி வியாசத்தினுல் சகல வேதாந்தரகசியார்த்
தத்தைச் சாமான்யமாகத் தரிசிப்பித்து அதின் பிறகு
நாற்பத்தினுலு சுலோகத்தினுலும் ப்ரமாத்வைதானு
பூதிரகசியார்த்தத்தைக் கூறுவான் ருெடங்கி
அஞ்ஞான விலாசமான ஜீவேஶ்வர ஜகத்
பிராந்தியானது விவேகஞானத்திரு
லன்றி நிவிர்த்தியாகாதெனத்
திருஷ்டாந்த பூர்வகமாகக்
கூறல்.

எத்திசையும் பத்திபாய்ந் திலங்குறுமுள் வாயில்புண
ரெழிற்கண் ணுடிப், பித்திமனை தனைமருவு பாலனுக்கு வேளி
வருதல் பெருவன் பாம்போற், துத்திரக்கற் பனைமயமாய்
மிகப் பொலிபல் வகையுருவங் கொண்டு வேறு, மத்திரவஞ்
ஞான மதை மருவுபுரு டனுக்குமுத்தி யடைதல் வன்பே. 2

(போ)—நான்கு திக்கிலும் பிரதிவிம்பிக்கப்பட்ட ஆவிர்த
கபாடத்தையுடைய முகுர கிரக மத்தியத்தை யடைந்து
பரிப்பிரமிக்காநின்ற பாலகனுக் கதினின்று வெளிவருவது
பராதீனமாயிருப்பது போல அனுதி யநிர்வசனீய அஞ்ஞான
வத்தியாச விலாசமான ஜீவேஶ்வர ஜகத்பிராந்தியையுடைய
சமுசாரகாராக்கிருகத்தையடைந்து தொந்தவியாமோகத்தினுல்
பரிப்பிரமிக்கின்ற ஜீவனுக்குப் பரமேஶ்வராவதார ரூபராகிய
சற்குருமூர்த்தியின துபதேச ரூபமான மகா வாக்கியார்த்த
விசாரத்தினு லுதிக்காநின்ற பிரஹ்மாத்வைத ஞானத்தினுலன
றி அஞ்ஞான தற்காரிய ரூபமான காமகர்மாதி சம்சார பந்த
த்தினின்று முத்தியானதொரு நாளுஞ் சுலபமாகாது.

(க)—படிகமாடத்தை யடைந்து மார்க்கந் தெரியாமற்
பிரமிக்காநின்ற பாலனுக்குத் தயாளுவாகிய புருஷன் துவாரந்
திறந்து விடுவது போல அவித்தியாந்தகார மோகத்தினுலே
சமுசாரப் பிராந்தியிற் பிணிப்புண்டுபிரமித்த ஜீவனுக்குக் குரு
வுபதேசானுபவஞானமே நிவிர்த்திக்கேது வென்பதாம். 2

(அ-கை)

*சாதனசதுஷ்டய சம்பன்னனுன அதிகாரி புருஷன்*
*சற்குருவுபதேசத்தினுல் விவேகஞான மடைந்து*
*ஜீவன்முத்திப் பதத்தை யடைவனென்பதைத்*
*திருஷ்டாந்த பூர்வகமாகத் தெரிவித்தல்.*

**சோரர்களாற்கோடியவா ரணியவழி யிலேயண்மித் துயர்கூர் பூமா,னிரகந்சேர் தன்னூரை நன்கு தேரிந் தோன் மோழியா னேரு மாறு, சீரடர்நற் சாந்திமுதற் சாதனங்க ணிறைந்துமிகச் சிறந்த பூமா,னோரறிசற் குருநாதன் மோழி யாற்றற் பதநிலையை நேரு வானே. 3**

(பொ)—*காந்தார தேசஸ்தனுகிய ஒரு புருஷன் தனது தனுதிகளை அபகரிக்கிறதற்காக வந்த சோரர்களால் தனுதிகள் அபகரிக்கப்பட்டு அவர்களால் பத்த நேத்திரனுய்ப் பத்த பாதனுய்ப் பத்த கரனுய்த் துர்க்கமமான வனமத்தியத்தையு மடைவிக்கப் பட்டவனுய் யாதொரு சகாயமுமின்றி வெகுவித துக்க பயத்தினு லுச்சசுரமாக விலாபனஞ்செய்யுங் காலத்தில் காகதாலீய நியாயம் போலத்தெய்வகதியால் வந்தஆப்தோபதேசத்தினுலன்றிச் சுவதேசமான தடையப்படாதது போல அவித்தியா காமாதி கள்ளர்களா லானந்தானுபூதி யென்னுந் தனத்தையும் பறிகொடுத்துக் கிருகக்ஷேத்திராசக்தி ரூபமான பாசங்களாற் பந்திக்கப்பட்டு விவேகதிருஷ்டியுமின்றிச் சம்சாராரண்ணிய மத்தியத்தில் ஆத்தியாத்மீகாதி தாபங்களானிரம்பவும் வெதும்பி சமுசார சுபாவாலோசனத்தினுற் சாதனசதுஷ்டய சம்பன்னனுய்க் குரு சாஸ்திரோக்த மகா வாக்கியார்த்த விசார ஜன்னியமான பிரஹ்மாத்மையிக்கிய ஞானுனுபூதியினுல் நிசரூபமான அகண்டானந்த பதமானது விருத்தித்துவய நிவிர்த்தியனந்தர மடையப்படுகிறது.*

(க)—*அவித்தியாபந்த நிவிர்த்தியை யிச்சித்த அதிகாரி புருஷன் சற்குரு கிருபையால் நிரதிசய திருப்தனுய்ச் சீவன்முத்தியை யடைவனென்பதாம்.* 3

(அ-கை)

*கர்த்திருத்வாதி தர்மவானாகிய புருஷன் அகண்டைகரச பூமபாவத்தை யடைவதெங்ஙனங் கூடுமென்றுள்ள சங்கையை நிவிர்த்திப்பிக்கிறதற்காகப் பரிகிருத பரிகாரமென்றும் பிராப்தப் பிராப்தி யென்றுமுள்ள நியாயத்தினாற் கூடுமென்று திருஷ்டாந்த பூர்வகமாகத் தெரிவித்தல்.*

நிருபனுடைக் குமரனுக்குத் தனதான தத்துவத்தை நிகழ்த்தலாலே, வருகயவ நீர்மைகழ லக்கழன்று நிருபனியல் வாய்க்கு மாபோற், சொருபசுக வொருபொருணீ யெனச் சொல்குரு வுபநிடதச் சொற்களாலே, மருவுகருத் துருத்துவ மாய்ந் தொருசுகமெய்ப் பொருணேரே வாய்க்கு மன்றே. 4

(பொ)—*சில துஷ்ட ஜனங்களால் வியாமோகிதனைச் சாத்தியாந்தர பாவத்தை யடைந்திருக்கிற ராஜகுமாரனுக்கு ஆப்த வாக்கிய பூர்வகமான தனது ராஜகுமார சுபாவஞானம் நிஷ்பிரதிபந்தமாய்ப் பிரகாசிக்க நீசத்துவ நிவிர்த்தி பூர்வகமான ராஜத்துவப் பிராப்தி கிடைப்பதுபோல சோதி தத்துவம் பதார்த்தனைச் சுரோதாவாகிய நீயே அகண்ட சிதாநந்த பூமார்த்தனென்று குரு சாஸ்திரோபதேசங்களால் தேகாதியகம்பாவ முத்தனாகிய ஜீவனுக்குக்கர்த்திருத்துவாதிப்பிராந்தி நிவிர்த்திக்கிறது; அத்துவிதானுபூதியுந் தானே பிரகாசிக்கிறது.*

(கு)—*கற்பிதமான கர்த்திருத்துவாதிப் பிராந்தியை மித்தையென் றறியுமிடத்தில் அகண்ட சிதாத்மஞானஞ் சுபாவமாய் விளங்கு மென்பதாம்.* 4

(அ-கை)

*பரமார்த்த தத்துவம் விசாரிக்குமிடத்தில் பந்த மோக்ஷ வியவகாரங்கள் பிராந்தி மூலமென்பதைத் திருஷ்டாந்த பூர்வகமாகத் தெரிவித்தல்.*

திரமலடி மைந்தனுக்குத் தேகமுத லாங்குணங்கள் சேறி தறனும், புரையறுமக் குணங்கவெலாம் போன்றுதலும் வெட்டவெறும் பொய்யாமென்னப், பிரமமயக் கூடத்த நித்தசுகப்போததனுப் பிரத்தி யக்குக், தாமருவு பந்தமுத்தி யென்பதும்புன் மயக்கத்தா லொளிரா நிற்கும். 5

(போ)—*நிர்விகார சத்தியஞானனந்த சைதன்னிய மூர்த்தியாகிய பிரத்தியகாத்ம வஸ்துவுக்கு சுவாஞ்ஞானத்தினல் பந்தஞ் சம்பவித்ததென்றும், தத்துவஞானத்தினல் பந்த நிவிர்த்தி சித்திக்கிறதென்றுமுள்ள வியவகாரமானது மலடி மைந்தனது சரீர சவுந்தரியாதி வர்ணனமும் அவனது மிர்தி வியவகாரமும் போல அஞ்ஞானப் பிராந்திமூலமாகையால் வாங்மாத்திர கற்பிதமே யாகும்.*

(க)—*பந்தமோட்ச மிரண்டும் பிராந்திகற்பிதமே யன்றிப் பாரமார்த்தத்தி லின்றெனக் கூறியதாம்.* 5

(அ-கை)

*தத்துவ திருஷ்டியால் விசாரிக்குமிடத்தில் நிர்விஷயமான பந்த மோக்ஷ கற்பனை ஆபாதஞானிகளுக் கேயன்றிச் சம்சய ஞானிகளுக் கின்றென் பதைத் திருஷ்டாந்த பூர்வகமாகக் கூறல்.*

தேரிகின்ற துறைதிமிரம் பேயாக வச்சமிகச் சேறிந் தோனுக்கே,யெரிகின்ற விளக்கொளியாற் கண்ணுற்ற லாங் கதுதா னியங்குங் கோல்லோ,திரிகின்ற வவிசார திட்டியினு லுண்டெனச்சொல் செகங்க ளெல்லாம்,புரிகின்ற வுண்மை விசா ரத்தினர்க்குக் கிஞ்சிலுமே பூஜ் தன்றே. 6

(போ)— நிரம்பவும் பயசீலனுகிய புருஷனுக்கந்தகாரமே மிகவுந் தடித்துப் பிசாசாதி ரூபமாய்க் கண்டாலும் அதனைத் தீபத்தோடுங் கூடிப் பரிசோதிக்கும்போது நீங்குவது போல அதத்துவ திருஷ்டியினுற் ஜீவேஶ்வர ஜகத் விஷய பந்த மோக்ஷாதி விவகாரமான தனுபவிக்கப்பட்டிருந்தாலும் தத்துவ திருஷ்டியால் விசாரிக்கும்போது காலத்திரயத்திலும் பிரத்யக்தத்துவ வெதிரிக்தமா யாதொன்றுமில்லை.

(க)—ஜீவேஶ்வர ஜகத் சுபாவத்தை விசாரிக்குமிடத்திற் பிரத்தியக் சைதன்னியத்தைத் தவிர வொன்று மின்றென்பதாம். 6

(அ-கை)

சர்வமுஞ் சின்மாத்திரமென்று திருஷ்டாந்த
பூர்வகமாகக் கூறல்.

போற்றுமோரு சிற்சோதி தானேயிவ் வுலகநுவாய்ப் போலியா நிற்குந், தேற்றமுற வாராயின் வேறுபோரு ளொன்றேனுஞ் செறிவ தில்லைத், தோற்றுமயற் கதிகாண மாம்பழுதை யல்லாது துன்று சர்ப்பஞ், சாற்றுநவே றேந போருடா னுதுதற்கேவ் வாற்றனுந் தக்க தாமே. 7

(போ)—அனன்னியாதீன சத்தாப்பிரகாசக ரூபமாய்ச் சர்வ சத்தாய் ஸ்புரண வேதுவாகிய பிரத்தியக் சைதன்னிய மொன்றே தேகேந்திரியாதிப் பிரபஞ்ச ரூபமாக விளங்குகின்றது. அந்தச் சிற்பிரகாசத்தைக் காட்டிலு மன்னிய வஸ்துவானது விசாரிக்குமிடத்திற் காலத்திரயத்திலு மில்லவேயில்லை. விவர்த்தாதிஷ்டானமாகிய ரச்சுவைக் காட்டிலும் அதனிடத்தாரோபிதமாகிய சர்ப்பமான ததிஷ்டான ரச்சுவைக் காட்டிலு மொரு விதத்திலு மன்னியமாகப் பவியாததுபோ லறிக.

(க)—சர்வாதிஷ்டானமாகிய சற்போதத்தைத் தவிர ஆரோபமான சகத்தாதி யென்று மின்றெனக் கூறியதாம். 7

அ-கை

*சேதனு சேதன ரூபமாகிய விஶ்வத்தை வியவகாரப் பிரயோசனுதி யோக்கிய மென்று சொல்லுவது நிர்விஷயமாமெனத் திருஷ்டாந்த பூர்வகமாகக் கூறல்.*

திறப்படவீ தேனத்தோன்று ஞாலமெலாம் பிராந்தி மாத் திரமே யென்று, மறப்போலிந்தன் னியமின்றிச் சுக மயமா மான்மாவே யுண்மை யாதுந், சிறப்புறநின்றேளிரு தலான் ஞாலமது முண்மையெனத் தேரிகே னென்று, லறப் புதுமை சுத்தியிர சிதத்தாற்றன் னியனேவன்று ளுகா னே கோ. 8

(போ)—*காரிய காரணரூபமான சகல சகத்தும் பிரமை விலாசமேயன்றி சத்தியஞான அகண்டானந்தாத்ம வஸ்து சம்பந்தமுள்ளதன்று. ஜகத்து வியவகாரமாத்திரத்தில் சத்திய பாவமடையுமாகில் எந்தப் புருஷன்முன் சுத்திகா ரசதத்தி னுல் தனவாகை மாட்டான்.*

(கு)—*ஜகத்து வியவகாரம் வாசனைப்பிராந்தியே யன்றி யுண்மையன்றெனக் கூறியதாம்.* 8

(அ-கை)

*சகல ஜகத்துங் காலத்திரயத்திலு மாயா மாத்திரமே யென்று திருஷ்டாந்த பூர்வகமாக உறுதிப்படுத்தல்.*

தோல்லுநினை வுறுபோது மற்றதெழ முன்னுமது தோலைந்த போது,மில்லதுதா னென்றூலு மிவ்வுலக மில ங்குகின்ற திறும்பூ தாமே, யல்லததி சயமென்னை போலு மகேந்திரசால மான தீங்குப்,புல்லுறுமா யாவியினுந் கற் பிதமென்றூலுமிகப் போலியுமன்றே. 9

(போ)—நாம ரூபாத்மகமான சகலப் பிரபஞ்சமு முற்பத் திக்கு முன்னும் பிரதீதிகாலத்திலும் விநாசானந்தரமு மில்ல வேயில்லை. ஆயினு மனிர்வசனீயமாய் விசித்திர பேதபின்ன மாய்க் காண்கின்றது. ஐந்திரசாலிகனது மாயாவிசித்திரத் தினு லுண்டாகிப் பிரகாசிக்கின்ற பிரபஞ்சவிலாசம் போலவா மென்க.

(க)—சகல ஜகத்து மித்தையாகத் தோற்றுகின்ற தெனக் கூறியதாம். 9

(அ-கை)

ஆத்ம பேதமு முபாதி நிமித்தமேயன்றி வாஸ்தவமன்
றென்பதைத் திருஷ்டாந்த பூர்வகமாக
உறுதிப்படுத்தல்.

இந்துதினந் துவிதமகன் றிருந்திடினும் புருடனுக்கிங் கிசைதற் கண்ணில், வந்துறையுந் தீமையினற் பலவடிவந் தானகி வயங்க லேய்ப்ப, நந்தலில்சன் மயப்பூமா வேனுந் சோருப மொன்றேனு நானு வாகிச், சந்ததந்தந் கற்பித மாந் தமப்படலக் கூட்டுறவாற் றயங்கு மன்றே. 10

(போ)—சஜாதீய விஜாதீய சுவகதபேத ரகிதமாய் அக ண்ட சிதாநந்த ரூபமாகிய பிரத்தியக்காத்மா சுவாசிரய விஷயமாகிய வவித்தையோபாதி யத்தியாசத்தினுல் நானு ரூபமாகக் காணப்படுகின்றது. நேத்திர தோஷத்தினுல் புரு ஷனுக்கு ஏக ரூபமான சந்திரன் நானுரூபமாய்க் காணப்படு கின்றது போலவாமெனக் கொள்க.

(க)—ஏகமான சிதாத்மவஸ்து அனேகமாய்க் காண்பது அவித்தியாத்தியாச பேதத்தாலெனக் கூறியதாம். 10

(அ-கை)

சம்சார சக்கரப் பிராந்தியானது அத்துவிதீ
யாத்மாபரோக்ஷ ஞானனுபூதியினு லன்றி
நிவிர்த்திக்கப்படமாட்டா தென்பதைத்-
திருஷ்டாந்த பூர்வகமாக
உறுதிப்படுத்தல்.

மட்டற்ற வெறும்பிரமை யால்விரிந்து திரநாளு மருவா தான, கட்டப்புன் புவனவட்டங் கொள்ளிவட்டந் தனையுற ழக் காணல் வேண்டு, முட்டற்ற தெய்வகதி யாற்பிரமை நட்டமெழன் முந்துமாறும், றுட்டத்தின் புவனமது முன்னுட் போற் பின்னுளுந் தோன்று தன்றே. 11

(போ)—*அந்தக்கரண வியாமோகமாத்திர ஜன்னியமாய் நசுவரமாயிருக்கின்ற சமுசார சக்கரமானது கொள்ளிவட்டம் போலத் தாபமாத்திர எதுவென் றறியத்தக்கது. தெய்வா தீனமாகச் சித்தவியாமோகம் நிவிர்த்தியாகுங்காலத்தில் சித்த மூலமான துவைதப் பிராந்தியும் நிவிர்த்தியாகு மென்க.*

(க)—*அத்துவிதீய வனுபவ ஞானத்தினுற் சித்தப் பிரா ந்தி நீங்குமென்பதாம்.* 11

(அ-கை)

*ஞானநிஷ்டன் உத்தான காலத்திற் சகத்தைப்*
*பிரதிபாமாத்திரமாய்க் கண்டிருப்ப*
*னென்பதைத் திருஷ்டாந்த*
*பூர்வகமாக உறுதிப்படுத்தல்.*

நிலைமையிலா விவ்வுலகங் கந்தர்ப்ப நகரம்போ னிக ரற்றேங்குந், தலைமைசெறி ஞானமெனும் பெயர்பூண்ட வம்பரத்திற் சாலந்தோன்று, மூலவகல வெமக்கான்ம வுணர்வுதிக்கின் வெயிலெரித்தா லொழியுமின்போன், மலைவுசெயு மந்த விந்த வுலகமெலா மக்கணத்தின் மறை ந்து போமே. 12

(போ)—*சிதாகாச ஸ்வரூபத்தில் அவித்தியாரோபமான சகல ஜகத்தும் விவேகஞான திருஷ்டியினுல் வாதிக்கப்பட்டுத் தக்தபடாதி போலப் பிராரத்தக்ஷயமட்டும் பிரதீதி மாத்திர மாய்க் காண்கின்ற தேகாதிப்பிரபஞ்சத்தைக் கந்தர்வ நகரம் போலவறிந்து விவகரிப்பன்.*

(க)—*சகலப் பிரபஞ்ச வியவகாரமு மிரச்சு சர்ப்பம் போல வாக்கு மாத்திர கற்பிதமெனக் கூறியதாம்.* 12

(அ-கை)

*அத்வைத புத்தியை யபவாதஞ் செய்யில்*
*அகண்டைகரசானுபூதி சேஷிக்கு*
*மென்பதைத் திருஷ்டாந்த*
*பூர்வகமாகக் கூறல்.*

ஆரோபமான ஜகத் தடங்கவடைவினிலொடுக்கு மருந் திறத்தாற், சீராரு நமது சித்தஞ் சிவமயமே யாகிநனி சேட மாதும்,போராரு மத்தகயம் பரர்ச்சேற்றுப் படுதுழியிற் புண ரா தென்று, னேராது மில்லாமற் கேவலந்தா னென்றே யாய் நிகழு மன்றே. 13

(போ)—*தனது விரோதி சம்மாரத்தினாலும் யானை மாவுத்தனது நாசத்தினாலும் மதோன்மத்தமா யேகமாய்ச் சஞ்சரிக்கு மத்தகசம் போல பிரவிலாபன சமாதி யப்பியா சத்தினால் அவித்யாரோபிதமான தேகாதி துவைதப் பிரபஞ்ச நிவிர்த்தி வரும்போது சித்தமானது பிரத்தியக் அபின்ன பர மாத்ம சொரூபமாகப் பரிசேஷித்து விளங்கும்.*

(க)—*மனன நிதித்தியாசன யுத்தியினால் அவித்தையா கற்பிதம் நீங்கில் அகண்ட சுபாவ ஞானானுபூதி விளக்கமா மெனக் கூறியதாம்.* 13

(அ-கை)

*ஞானநிஷ்டனது சரீர நீங்குகின்றதற்குக்*
*காலாதியபேட்சை வேண்டா*
*மென்பதைத் திருஷ்டாந்த*
*பூர்வகமாகக் கூறல்.*

இம்பருட லின்றேழிக வலதுறைக சசியநக்க னிருக்கு மட்டும், விம்பமயச் சித்துருவாய் விளங்குமெனக் கதனாலே விசேடமென்னே, தும்பமிப்போ துடைகவன்றிச் சிரகால நிலைபெறுக தும்பம் பம்பு, மம்பரத்தி னுக்கணுமாத் திரமே னும் விசேடமென்ப தணுது றதே. 14

(போ)—ஞானுக்கினியால் தக்தமான இந்தச் சரீரமானது இந்த க்ஷணத்திலே போனாலு மல்லது கற்பகால பரியந்த மிருந்தாலு மதினாற் சிதாகாசவடிவனாகிய வெனக்கு யாதொரு விசேஷமுமில்லை. கடாதிகளினது வெகுகாலத் திதி நாசங்களால தினிடத்தி லப்பரிச்சின்னம் போலவிளங்குகின்ற ஆகாயத்திற்கு யாதொரு விசேஷ சம்பந்தமு மில்லாதது போலவாமென்க.

(க)—சிதாகாசனான புருடன் காலாதீதனானதால் மித்தையான சரீரம் நீங்குகையைக் குறித்து நியமாபேட்சை வேண்டாமென்பதாம். 14

(அ-கை)

*விஷய சிந்தையினாற் பிராணிகள் சமுசாரப்*
*பிராந்தியை யடைகிறார்களென்பதைத்*
*திருஷ்டாந்த பூர்வகமாகக்*
*கூறல்.*

தங்குறுசிந் தனையினழுத் தத்தினாற் றேற்றுகின்ற
தையற்கண்டிவ், வங்கனைமற் றவளொன்றே நீணாள்வெய்
துயிர்த்திரங்கு மவனைப் போலுஞ், சங்கற்ப மாத்திரத்தாற்
பலவிகற்ப மாய்த்தோற்றுஞ் சகங்க ளெல்லா, மிங்குச்சத்
தியமென்றே மந்தமதி யினன் வாளா வேற மாலும். 15

(போ)—வாகிய விஷயஞ் சத்தியமென்றுள்ள திடபாவனையினாற் காணப்படுகிற ஜகத்து பிரதீதி மாத்திரமா யிருந்தாலும் அதனைச் சத்தியமென்று கருதி மூடபுத்தியுள்ளவன் மயக்கமடைகிறான். காமியானவன் றனது பாவனாதாருட்டியத்தினாற் சாமான்ய விஷயங்களைத் தனது இஷ்டஸ்திரீயெனக் கருதி பிரமிக்கின்றது போலவாமென்க.

(க)—சகல விஷயமுந் தோற்றன் மாத்திரமென்பதை யறியாத மயக்கமே சமுசாரப் பிராந்தியென்பதாம். 15

(அ-கை)

*ஜீவன்முத்தர்கள் பிராரத்த க்ஷயமட்டும்*
*விப்ரவத்தை மித்தியா சித்திரமெனக்*
*கண்டு நிச்சயித்தனுபவிப்பார்க*
*ளென்பதைத் திருஷ்டாந்த*
*பூர்வகமாகக் கூறல்.*

தன்னியல்பிற் றற்சுவையாய்ச் சச்சிதா னந்தமாய்த்
தயங்குமென்பாற், றன்னியமா மோகத்தா லுண்டெனச்
சொற்றிடுமிந்தத் தோன்மை ஞால,மன்னியவோ ரிடத்தினுங்
காணப்படா தருவுருவே வடிவ மாது, மன்னியவிண் ணோவி
யமே போலுமென வையமற மதித்து மியாமே. 16

(போ)—*சகல கற்பனுதிஷ்டான பூதமாய் அகண்ட சிதானந்த ரூபமாகிய வெம்மிடத்திற் பிராந்தர்களின து அஞ்ஞான தோஷத்தினுற் றேகேந்திரியாதிப் பிரபஞ்சமென்று யாதொன்று கற்பிக்கப்படுகிறதோ அதனை மற்றொரு ஸ்தலத்திலுங் கண்டனுபவிக்கப் படாததாய் நிராகாரமாகிய அஸ்தான சித்திரமென்று நிச்சயித் தனுபவிக்கின்றோம்.*

(க)—*ஆகாயத்திற் சித்திரமெழுதியது போலச் சகத் பிராந்தியை யறிவதென்பதாம்.* 16

(அ-கை)

*ஆரோபவிலாசங்களா லதிஷ்டானமாகிய*
*சித்வஸ்து விகார சம்பந்தமடையா*
*தென்பதைத் திருஷ்டாந்த*
*பூர்வகமாகக் கூறல்*

வானிறம்போற் றிகழத்தி யாசபே தத்தினுன் மறைபட்
டாலு, ஞானகன மானபொருள் கண்டவொரு தற்சுவையை
நனிநீங் காதா, லூனமுறு பற்பலச ராசரவி சித்திரத்தோ
டோன்றி னுலுந், தானமரும்படவியல்பைச் சித்திரவத் திர
மேன்றுந் தணந் திடாதே. 17

(போ)—அனுத்மாத்தியாச ரூபமான ஜீவேஸ்வர சகத் பேதத்தினற் றிரோதான மடைந்தது போலிருக்கிற பிரத் தியக் வஸ்துவானது தனது பேதத்திரய ரகிதமான அத் துவிதீய பாவத்தை விடுகிறதில்லை. வெகுவித சித்திர பேதங்களாற் பூரணமாயிருக்கிற சித்திரப் படமானது தனது படபாவத்தை விடாதிருப்பது போலவென்க.

(கு)—காரணங் காரியங்களினல் மறைக்கப்பட்டது போல விளங்குவது வியவகார மாத்திரமென்பதாம். 17

(அ-கை)

ஞானநிஷ்டை யுடைத்தானவன் துர்லப
னென்றவனது ஞானனுபூதியைத்
திருஷ்டாந்த பூர்வகமாகக்
கூறல்.

சத்தியசிற் சுககனமா யகண்டிதமாய்த் தெளிபொரு ளாய்த் தானு மான்ம, தத்துவவத் துவையொருவ னேன் றே மிகத்தெளிவன் றடையோன் றின்றிப், பொத்துடலிந் தியமுதலி யவற்றையயல் வாதனைகள் பூண்டு நிற்ந்து, மத்த மதி யினனென்ன தியானென்றே சங்கையற மதித்தன் மானும். 18

(போ)—கோடியிலொருவன் ஆசாரியப் பிரசாதத்தினற் சட்லித லிங்கங்களினலும் சுருதி யர்த்த விசாரஞ்செய்து சத்தியஞான அகண்டானந்த லட்சணமாகிய பிரத்தியக் தத் துவமே நானென் றறிகிறன். அவித்தியா வாசனையினலுஞ் சாவகாச தோஷத்தினலும் அவிவேகியாகிய புருஷன் றேகாதிகளே நானென்றறிந் தபிமானிப்பது போலவென்க.

(கு)—தேகாதி வாசனையிலுள்ள பிடிப்பு நீங்கி பிரத்யக் சொரூபத்திற் பிடிப்புள்ளதே ஞானநிஷ்டைக்குப் பிரயோ சன மென்பதாம். 18

(அ-கை)

அத்தியந்தஞ் சூட்சும புத்தியுள்ள தீரர்கள்
அதத்துவியா விருத்தி யுபாயத்தினுல்
ஞானனுபூதி யடைவதைத் திருஷ்
டாந்த பூர்வகமாகக்
கூறல்.

செங்கதிரோன் வெங்கதிரா லெதிர் நிகழும் பேய்த்தே ரைத் தீரத் தீர்ந்து, கங்கையினற் குளிர்புனலைப் புனிதமுறு மதியாள்கள் கைக்கொண் டாங்கு,மங்துலகை வெறும்போய் பசை யிலதெனத்தூ ரத்தகற்றி மாதீ ரத்தாற், போங்கி னிய வொருசுவையை முனிவரர்க ளநுபவிப்பர் போலி யுள் ளத்தே. 19

(பொ)—தேகேந்திரியாதி சகலப் பிரபஞ்சமு மாயா மாத்திரமென்று தைரியத்தினுல் நேதி செய்து சருவவிலட்ச ணமாகிய பிரத்தியக்கானந்தானுபூதியானது இருதயத்தில் விவேகி ஜனங்களா லடையப்படுகிறது. உத்தம புத்திசாலிக ளாகிய புருஷர்கள் உல்லோல கல்லோலத்தோடுங் கூடிக் காணப்படுகிற மரீசிகாப் பிரவாகத்தை விட்டு கங்காப் பிரவா கத்தை ஆசிரயிப்பது போலவாமென்க.

(க)—தேகாதிப் பிரபஞ்சங்களை நியதி செய்யுமிடத்தில் யதார்த்த வஸ்துவான தடையப்படு மென்பதாம். 19

(அ-கை)

பிராகிருத ஜனங்கள் பிரத்தியக் தத்துவத்தைக்
குரு மூலமாய் விசாரித்தறிகிறூர்க
ளில்லையென்பதைத் திருஷ்டாந்த
பூர்வகமாகக் கூறல்.

ஓன்றுத மண்ணியதா மிகவேளிதாமிணைத்தாத மோப் பி லாத, நன்றுன வம்பரத்தி னனிதோன்று ஞாலமேலா நதவித் தெங்தந்,தன்றேசாந் பரவுமெழி லாத்துமதத் துவ

விரவி தன்னை யையோ,வன்றிய மூடவுல குலூகநிரை யாத ரித்து மதியா வன்றே. 20

(போ)—சர்வ ஜகப் பிரகாசகராகிய ஆதித்தனைக் கூகைகள் விழியின் குற்றத்தால் தெரிசித்தற்குற்சாகஞ் செய்யாததுபோல நித்தியாபரோட்ச சித்தமாகிய பிரத்தியக் காத்ம தத்துவத்தைத் தேகாத்மபுத்திகளாகிய அஞ்ஞ ஜனங்க ளாதரிக்கிறார்க ளில்லை.

(க)—அஞ்ஞான தோஷத்தினால் ஆத்மப் பிரகாசத்தை யிச்சிக்கவில்லை யென்பதாம். 20

(அ-கை)

தத்துவாஞ்ஞானமூலமான வன்னிதாஞானமே
மூட ஜனங்களுக்கு வெகுவித ஸம்ஸார
தாபஹேதுவா மென்பதைத்
திருஷ்டாந்த பூர்வகமாகக்
கூறல்.

மன்னியவா னந்தவொளி வடிவமதாய் நிகழினுமிம் மாஞா லத்தை, யன்னியமா மெனப்பாவித் தறிவில்லான் பெருந்தாப மடைவன் சீசீ, மின்னியதீ பாதிகளிற் றிநசிய மாய் மிளிர்தருந்தன் மேனிச் சாயை, தன்னினைவே றென் றெண்ணி மாமோகத் தினின்மூழ்குந் தனிச்சே யொத்தே.

(போ)—நிரதிசயாநந்த சத் சித் விலாசமாகிய ஜகத்தை யாத்மப் பிரகாசத்தைக் காட்டிலு மன்னிய மென்று கருதிய மூடன் வெகுவித சமுசாரக் கிலேசங்களை யடைகிறான். தீபாதியாசிரயங்களினாற் றனது சரீரத்தைச் சம்பந்தித்துக் காணப்படுகிற சாயையை யன்னியமென்று கருதிப் பரிப்பிர மித்த பாலகன் றுபமடைவது போலவாம்.

(க)—ஆத்மாவை யனாத்மாவெனக் கருதிய மோகமே தாப ஏது என்பதாம். 21

(அ-கை)

*மாயையினாலும் மாயா காரியங்களாலும்*
*ஆத்மாவிற்குக் காலத்திரயத்திலு*
*மியாதொரு சம்பந்தமுமில்லை*
*யென்பதைத் திருஷ்டாந்த*
*பூர்வகமாகக் கூறல்.*

மடமான மாயைதனு துருவமிலா வான்முதலாம் வகைக
ளாலே, தடமான வசங்கவொரு சின்மயனைப் பேதிக்கத்
தக்க தன்றாந், திடமான மழைத்தாரை தன்னுடைய துளிக
ளின்மென் றிரள்க ளாலே, யிடமான பசும்பதும பத்திரத்
தை நனைப்பவுரித் தென்கோ லாமே. 22

(போ)—*அனிர்வசநீய அநாதி யவித்தையானது தனது விலாசமாத்திரங்களான ஆகாசாதி விகாரங்களால் அசங்க சித்து ரூபமாகிய ஆத்மவஸ்துவைப் பரிசிக்கமாட்டாது; வருஷதாரையானது தனது சலகணங்களாற் பத்மதளத்தைப் பரிசிப்பதில் யோக்கியமாகாதது போலவாம்.*

(க)—*நிர்மலமான வஸ்துவை மலதோஷஞ் சம்பந்தியா தென்பதாம்.* 22

(அ-கை)

*மனோகற்பனா விலாசங்களான ஜகத் விகற்பங்*
*கள் அசங்கசிதாத்ம நிஷ்டனாகிய ஜீவன்*
*முத்தனை ஸ்பரிசிக்கமாட்டா வென்*
*பதைத் திருஷ்டாந்த*
*பூர்வகமாகக்*
*கூறல்.*

தோற்றாவு மாத்திரமிங் குருவான சகவிகற்பத்
தொகுதி யெல்லா, மூற்றமுறு சங்கமிலா மொருவியசின்
மயவென்னை யொட்டா வன்றே, மாற்றருமா ரோபிதமா
மலினாதி விசித்திரதன் மங்க ளெல்லாந், தேற்றமிது நிருமல
மாய் வெளியுருவாம் வியோமத்தைத் தீண்டுங் கொல்லோ,

(போ)—இரச்சு சர்ப்ப சுத்திகாரசித ஸ்தாணு புருஷ மரீசி சல கந்தர்வ நகராதிபோலப் பிரதீதி மாத்திரங் களான விப்ரவ விகற்பங்களானவை அவித்தியா காமகர்மாதி வாசனுலேச ரகிதனுய் நித்திய சுத்த புத்த முத்த சத்தியஞான கண்டானந்தனுகிய வென்னைப் பரிசிக்கமாட்டா. அஞ்ஞ ஜனங்களா லாரோபிக்கப்பட்ட நீலத்துவாதி வர்ண விகாரங் கள் நிர்மலமான ஆகாயத்தைப் பரிசியாததுபோலவாம்.

(க)—சொச்சமான சிதாத்மவஸ்துவை அந்தகாரமயமான ஜகத் விகற்ப மடாரதென்பதாம். 23

(அ-கை)

தேகத்திரயங்களு மவற்றிற்குரித்தான தர்மங்களுஞ்
சர்வ சாட்சியான ஆத்ம வஸ்துவைச்
சம்பந்தியாவெனத் திருஷ்டாந்த
பூர்வகமாகக் கூறல்.

**பரிபூரண மாகிநிறைந் திருக்குமொரு கரியான பரமா மேன்பரீல், விரிவுறுசாக் கிரத்திறுெடு சொப்பனமே சுழுத்தியேன விளம்பப் பட்ட, திரிவிதமா மவத்தைகளு நாடோறும் பிறப்பிறப்புச் சேறிந்த வாகி,வரியமரு பூரகபதி வபுவினிற்கஞ் சுகங்கள்போல் வயங்கு மன்றே. 24**

(போ)—சர்ப்பசத்தையினுல் ஜீவித்திருந்த சட்டை யானது சர்ப்ப சம்பந்தமில்லாம னீங்குங் காலையில் சர்ப்பமோ சேஷித்திருப்பதுபோலத் குணத்திரயங்களின துற்பத்தி நாச ங்களால் ஆவிர்ப்பாவ திரோபாவ தர்மம்பொருந்திய அவஸ்தாத் திரயங்களும் அவற்றினதாசிரயங்களான ஸ்தூலசூட்சுமகாரண மான சரீரத்திரயங்களும் பிரத்தியகாத்ம சத்தையினுற் ஜீவித் திருக்கின்றனவாயினும் விவேக திருஷ்டியினு லத்தியாச சம்பந்த நீக்கமாகின்றபோது பிரத்தியகாத்ம வஸ்துவுக் கியா தொரு சம்பந்தமு மின்றித் தான் மாத்திரமாய்ச் சேஷித் திருக்கு மென்பதாம்.

(க)—சர்வாதிஷ்டான பிரத்தியக் பிரஹ்மசத்தையேசுபா வ சத்தை யெனக் கூறியதாம். 24

(அ-கை)

*தத்துவம் பதார்த்தங்களுக்குச் சத்தபேதமே யன்றி யதார்த்தபேத மின்றென்பதைத் திருஷ்டாந்த பூர்வகமாகக் கூறல்.*

சொப்பனமே சாக்கிரமே யெனப்புகலும் விசேட மிது சோலால் வந் தன்று, துப்புறுமா யாமயமா துதலந்த விரண்டினுக்குந் துலிய மேயா, மப்படியே பிரத்தியக்குப் பராக்கென்னும் விகற்பமுநா மத்தா லான, தெப்போழுது மெய்ஞ்ஞான சுகமேயிவ் விரண்டினுக்கு மியல்ப தாமே. 25

(பொ)—*ஜீவனென்றும் பரனென்றுஞ் சொல்லப்படுகிற விகற்பமானது நாமமாத்திரமாகிறது. யாதொரு காரணத்தினால் ஜீவபராளுக்குச் சத்தியஞான சுகமே சொரூப லட்சணம். அன்னிதாக்கிரகண ரூபமான ஜாக்கிர சொப்பனப் பிரபஞ்ச முழுவது மாயாமயமா யிருந்தாலுஞ் சாக்கிரமென்றுஞ் சொர்ப்பனமென்றுஞ் சத்த பேதத்தினால் வியவகரிக்கப் படுவது போலவாம்.*

(க)—*திருஷ்டாந்தமே தாஷ்டாந்தமாயும், தாஷ்டாந்தமே திருஷ்டாந்தமாயும் பெரியோர்கள் சொல்லுவது பிரத்தியகாத்மாவே பரமாத்மா, பரமாத்மாவே பிரத்தியகாத்மா வென்பது போலவாம்.* 25

(அ-கை)

*விஸ்ராந்த சித்தர்களாகிய ஜீவன் முத்தர்க ளனுபவ முரைத்தல்.*

புறப்போருளின் வருவிசன சம்பந்தத் தாலிளைப்புப் போருந்து றதாய்ப், பறப்பறவிந் தியவழிச்சேல் லாத்டங்கிச் சகவிகற்பப் பற்றேன் றின்றிச், சிறப்பமர்தன் ஞனந்த மாத்திரமாய்த் தனித்திருக்குஞ் சித்தம் பேற்றே, றுறப்படு சாக்கிரத்தினுநற் சுழுத்தியநு பவத்தினிலைத் துவகைகூர்வார்.

(போ)—வாகியாந்தர சங்க ரகிதராய் அத்தியந்த முப சாந்த சித்தராய் ஜீவேஶ்வரா ஜகத்பேதப் பிரமரகிதரா யிருக்கிற ஞானநிஷ்டர்கள் சுவாராச்சிய சாம்பிராச்சிய சுகத் தில் ரமித்துச் சதா சாக்கிரத்துக்களா யிருந்தாலும் சுழுத்தி காலம்போற் சகஜமான சமாதியானந்தத்தையே யெல்லாக் காலத்திலு மனுபவிக்கிறார்கள்.

(க)—ஜீவத்துவ நீங்கிய பிரஹ்மநிஷ்டன் ஆனந்தப் பிர ஞ்ஞையோடுந் திருப்தனுயிருப்பனெனக் கூறியதாம். 26

(அ-கை)

*அவிவேக ஜனங்களாற் சீவன்முக்தன் கருத்தா*
*போக்தா வென்று கிரகிக்கப்படுபவனுகிலும்*
*பரமார்த்தமா யவன தனுபவத்திஞற்*
*கருத்துருத்துவாதி தர்மமவனுக்*
*கின்றென்பதைத் திருஷ்டாந்த*
*பூர்வகமாகக் கூறல்.*

காயமுயல் வுறுத்நமக் கட்டுற்றே ரொன்னைமிகக் கருத்த னென்றே, யேயநினைக் கின்றனரே லதனு லென்னிருந்தபடி யிருக்கின் றேனுற், றேயவரு மேகமதிற் புக்கானேன் றற மூடர் துணியப்பட்ட, தூயதுளிர் மதியமவ்வா றம்புதத்தி னணித்தேனுந் தோயுங் கோல்லோ. 27

(போ)—திரிவிதகரண வியாபாரத்திலே திருஷ்டி யுடைத்தான பாமர ஜனங்கள் அசங்கசிதாத்மாராமனுகிய ஜீவன் முத்தனைத் தொழிற் செய்பவனென்று கிரகிப்பார்களாயினு மவர்களது மித்தியாக்கிரகணத்தாற் சீவன்முத்த னந்தத்தர்மம் பொருந்தினவ னுகமாட்டான். மேகநிஷ்டமாகிய சலனுதி தர் மத்தைப் பாமர ஜனங்கள் சந்திரனிஷ்டமென்று கூறுகின்றா ராகிலும் அந்த மேகநிஷ்டமான சலனுதி தர்மஞ் சந்திரனுக் கில்லாதது போலவாம்.

(க)—அத்தியாச பேதப் பிரமண நீக்கத்தி லாத்மப் பிர காச முண்டாமென்பதாம். 27

(அ-கை)

*அத்துவித தரிசியாகிய ஜீவன்முத்தனுக்கு*
*வியவகார காலத்திலுந் துவைதப்பிராந்தி*
*யுதியாதென்பதைத் திருஷ்டாந்த*
*பூர்வகமாகக் கூறல்.*

மித்தையதாய்த் தோன்றுறுமேற் றேன்றுறுக விவ்வுலக விசித்தி ரந்தா, னத்துணையாற் றத்துவவித் தாகிநிக ழெனக்குவரு மானி யேதோ, சுத்தமயக் காங்கனவிற் பயந் தருகைப் பகடாதி திகழ மேனு, மோத்தவிது சொப்பனமே யென்றனுசந் திப்பவனுக் குறுமோ பீதி. 28

(போ)—*அனேகவித நாமரூபாத்மகமான சகல ஜகத் விசித்திரமு மிந்திரசாலம் போன்று மாயாமாத்திரமென்று கண்டு ரமித்திருக்கிற ஜீவன்முத்தனுக்கியாதோரா னியுமில்லை. நித்திரா தோஷத்தினுற் சொப்பனுவஸ்தையி லனேக வித கச முதலான வடிவங்களைக் கண்டனுபவித்தோமென்று சிந்தித்தாலுஞ் சாக்கிரத்தோடுகூடிய புருஷனுக் கதனுலோரானி லாபங்களில்லாதது போலவாம்.*

(க)—*ஸ்வரூபப் பிரக்ஞையுடைத்தான விவேகிக்கு மாயா ரூபமான அன்னிய சிந்தை யின்றென்பதாம்.* 28

(அ-கை)

*ஜீவன்முத்தன் பிராரத்த க்ஷயமட்டுஞ் சகலமு*
*மித்தை யென்று போகம் புசிப்ப*
*னென்பதைத் திருஷ்டாந்த*
*பூர்வகமாகக் கூறல்.*

அனைத்துலகு மசத்தென்றே நெடுங்கால 'நன்றுக வாய்ந்தோர்ந் தோனுந், தினைத்தேனினும் பிரியாதத் தியாத்துமதிட் டியைச்சததஞ் செறிந்தே நிற்பா, னுனந்ததுமிங் கானனந்தா னெக்காலு மில்லையென வோருப்பட் டோனு, மனித்திகழ்தன் முகங்காண விரைந்தத்தங் கைக்கோள்ளன் மானு மன்றே. 29

(போ)—சகல ஜகத்துங் காலத்திரயத்திலு மில்லவே யில்லை யென்று சதா இட நிச்சயமுடைய ஞானநிஷ்டனானவன் சரமசரீரபதன பரியந்தம் பாமர ஜனங்கள் போற் போகம் புசிப்பன். முகுரத்தில் முகமில்லையென் றறிந்திருக்கிற புருஷன் முகதரிசனத்தின் பொருட்டுக் கண்ணாடியை ஆசிரயிப்பது போலவாம்.

(க)—விஷயங்கள் சத்திய மின்மையால் அவற்றிலவாவின்றிப் புசிப்ப னென்பதாம். 29

(அ-கை)

வாசனாத்திரய ரகிதனாகிய ஜீவன்முத்தன்
மனதிலியாதொரு சங்கமுமில்லாதவ
னென்பதைத் திருஷ்டாந்த
பூர்வகமாகக் கூறல்.

பொருத்தமுறு மாதாவாற் கவளங்க வளந்தோறும் புலனுற் றலும், பெருத்ததுயி லாற்சிசுதான் வேறென்றுந் தெரியாத பெற்றி போலப், பருத்தவிழி யதனாலிவ் வுலகேனுமிந் திரசாலம் பார்த்திட் டாலுந், திருத்தமுறு மகத்தோரோர் ளொளியாலே யாதொன்றுந் தெரிகி லேனே. 30

(போ)—இந்திரஜாலத்தினுண்மையைத் தெரிந்த புருஷனிந்திரஜாலக் காட்சியினால் மனதில் மயக்கமடையாதிருப்பது போல, ஆத்ம சன்னிதியிற் காணப்படுகிற தேகேந்திரியாதிப் பிரபஞ்ச மிந்திரஜாலம்போ லென்னுமநுபவத்தினால் ஜீவன்முத்தனியாதொரு மயக்கமுமுறான். ஸ்வரூபஸ்திதியினின்று நழுவுதலையு மடையான். நித்திரா பரவசனாகிய பாலகன் மாதாவினாற் கொடுக்கப்பட்ட கவள பக்ஷணந்தோறும் கவள பக்ஷணந்தோறும் வெகுவித கதா திருஷ்டாந்தங்களாற் போதிதனா யிருந்தாலு மனதி லியாதொன்று மறியா தனுபவித்தது போலவாம்.

(க)—அதீதானுபவ சுகத்திற்கலந்த வறிவுக் கவ்வானந்தப் பிரஞ்ஞையைத் தவிர அன்னிய பாவ முதியாததெனக் கூறியதாம். 30

(அ-கை)

துவைத திருஷ்டியினு லத்துவித திருஷ்டி
மறைபட்டிருப்பது போல அத்துவித
திருஷ்டியினுற் றுவைத திருஷ்டி
மறையப்படுமென்பதைத் திருஷ்
டாந்த பூர்வகமாகத்
தெரிவித்தல்.

திருசியந்தான் புடமாகத் தீகழுமேனிற் பூமவுருத் திகழா
தாதுமிருமையறு பூமவுரு விலங்குமேனிற் றிருசியமற் றிலங்
கா தாமே, மருவலுறு மறுதீவுத் தெரியுமேனி னிப்பூமி
மறைந்து போதுந், தெரிவுறுமே லிப்பூமி மறைந்துபோ
மவ்வா றத் தீவு தானே. 31

(போ)—வாகிய விஷயாசக்தியினுற் றிருசியப் பிரபஞ்ச
முறுதிப் படுங் காலத்தில் அகண்டானந்தைகரசராகிய பூமாத்
மாவானவர் பிரகாசிக்கமாட்டார். சத்தியாதி லட்சணராகிய
பூமாத்மா நிஷ்பிரதிபந்த திருஷ்டியினுற் பிரகாசிக்குங்
காலத்தில் அஸிர்த ஜடதுக்க ரூபமான திருசியப் பிரபஞ்ச
மறைபடும். தீவாந்தரத்தி லிந்தப் பூமி காணப்படாமலும்
இந்தப் பூமியில் தீவாந்தரங் காணப்படாதது போலவாம்.

(க)—ஞானதிருஷ்டியாற் பிரபஞ்சமும் பிரபஞ்ச திரு
ஷ்டியால் ஞானமு மறைபடுமென்பதாம். 31

(அ-கை)

சுபேச்சை முதலிய பூமிகாப்பியாசக் கிரமமாகப்
பிரமாண ஞானுனுபூதி உறுதிப்படுங்
காலையில் துவைத வாசனைப் பிராந்தி
திருஷ்டி மறைபடுமென்பதைத்
திருஷ்டாந்த பூர்வகமாகத்
தெரிவித்தல்.

சந்திரன்றன் கலையென்ப தனுதினமும் பெருகுதலைச்
சார்ந்த தாகின், மைந்துறுபே ரிருளான தடைவாக நாச
முறு மாபு போலச், சுந்தாநற் பிரபோதம் பயப்பய்ய மிக

வளர்ந்து துன்னு மென்றால், வெந்துயர்செய் விப்பிரமை துகடீர விருதயத்தில் வீய்ந்து போமே. 32

(போ)—*ஆசாரியருபதேச பூர்வகமான மகா வாக்கியார்த்த விசாரஜன்னிய விவேக ஞானமானது மனன நிதித்தியாசனுதிக்கிரமமாக விருத்தித்துவயஉபாதியினால்அகண்ட விருத்தி ஆரூடமாகப் பிரகாசிக்கும்போது மனோ நிஷ்டமாகிய கத்துருத்துவாதிப் பிராந்தி வாசனைகளெல்லா நிர்மூலமாக நிவிர்த்திக்கும். சுக்கிலபட்சத்திற் கிரமமாகச் சூரிய சம்பந்தத்தினாற் சம்பூர்ணராய்ச் சந்திரன் பிரகாசிக்குங் காலத்திற் கிரமமாக அந்தகாரம் நிவிர்த்திப்பதுபோலவாம்.*

(க)—*பரிபூர்ண ஞானுனுபவ காலத்திற் பரிச்சின்ன பாவந் தோன்றாதென்பதாம்.* 32

(அ-கை)

*பிரஹ்மானந்த திருப்தனாகிய ஜீவன்முத்தனுக்குக்*
*கிரியா நியம மின்றென்பதைத்*
*திருஷ்டாந்த பூர்வகமாகக்*
*கூறல்.*

பிரமவநு பூதிதரு மோநசுவையா னிறைவுபெறு பெரியோர் தம்பாற், கருமவநு பந்தத்தால் வருவிதிக ளெல்லா முங் கழன்று போமே,வாமருள்சித் தர்கபேரிவித் திடுமிரசாயனமருந்தி மகிழ்வார்ந் தோர்பாற், றாழறுபா கத்தால்வந் துறுமருந்தின் விதிகளெலாந் தங்குங் கொல்லோ. 33

(போ)—*பிரஹ்மாத்மைக்க ஞானனந்தானுபூதியினாற் பரம திருப்தனாய்க் கிருத கிருத்தியனாயிருக்கிற ஜீவன்முத்தனிடத்தில் கர்ம சம்பந்த விதிகள் பிரியமின்றி நிவிர்த்திக்கின்றன. யோகசித்தனால் பிரத்தியக்ஷமாகக் கொடுக்கப்பட்ட ரசாயனாதி திவ்விய ஔஷத பானங்களினாற் திருப்தியடைந்திருக்கிற புருஷனுக்குப் பிராகிருதாவுஷத பானங்களானவை ருசியேதுவாகாததுபோலவாம்.*

(க)—*ஆத்மானந்த திருப்தனான ஜீவன்முத்தனுக் கிராசத விருத்தியின்மையால் கன்மந் தானே நீங்குமென்பதாம்.* 33

(அ-கை)

கிருதகிருத்தியனுகிய ஜீவன்முத்தனது சமாதி
சீலத்துவம் லோகானுக்கிரக நிமித்த
மென்பதைத் திருஷ்டாந்த
பூர்வகமாகத் தெரிவித்தல்.

சகலவடி வழந்தானுய்த் திகழுமுனி வானுமோரு சமாதி தன்னை, யகிலமதி னுட்கழிப்பான் முன்போலன் புற்றுமிக வாதரிப்பா, னிகிலவளப் பழநிறைந்த பூபால னேருவன்று னோரம் போக்க, வகைவகையாஞ் சதுரங்கந் தனைநேயம் வைத்துமிக வளர்ப்ப னன்றே. 34

(போ)—அகண்டைக ரசானுபூதி பெற்ற வித்வான் பூர்வானுகுணமாகப் பிராரத்தகர்ம நிவிர்த்தி பரியந்தஞ் சமாதி நிஷ்டையையே ஆசிரயிக்கிருன். சர்வ சாம்பிராச்சிய சம்பன்னனுகிய ராஜாவானவன் காலக்ஷேபத்தின் பொருட்டுச் சதுரங்க பலத்தை ரக்ஷிப்பதுபோலவாம்.

(க)—ஞானியுடைய சமாதியனுஷ்டானமும் லோகானுக்கிரக நிமித்தமெனக் கூறியதாம். 34

(அ-கை)

ஜீவன் முத்தனுல் விடப்பட்டவையே
நிஷேத சாஸ்திர சம்மதமெனத்
திருஷ்டாந்த பூர்வகமாகத்
தெரிவித்தல்.

விதிகளெலாஞ் செய்யாமல் விடுத்தோனையான்மாவை மிகத்தேர்ந் தோனுய்ப், போதுவேனுமா மறைபுகலு' நிடேதமேலா மாநந்தம் பொருந்து விக்குந், திரமருவு கருமமாத் திரநோக்காச் சோம்பனுக்குச் செய்கையாதுங், கதுவுற வேண்டாவேன்று புகல்வோன்றன் மோழிகண்மனே காங் களாமே. 35

(போ)—வித் நிஷேத சகல நியதிகளையுங் கடந்த சங்காத்மமாத்திரந் திருப்தனுகிய ஜீவன்முத்தனைச் சுருதி சம்பந்

தங்களான நிஷேதங்களியாவுஞ் சந்தோஷிப்பிக்கின்றன. சகல வியாபாரங்களிலும் விமுகனாய் அத்தியந்தஞ் சோம்பலுடைத்தான புருஷனுக்கு நீ யாதொன்றுஞ் செய்யவேண்டாமென்று சொல்பவனாகிய புருஷனது வசனங்கள் மனோகரங்களாய்ப் பவிப்பதுபோலவாம்.

(க) ஞானியாகிய சீவன்முத்தனால் விடப்பட்ட சகலமும் நிஷேதமெனக் கூறியதாம். 35

(அ-கை)

தத்துவஞானி விதிகிங்கரனாகா
னென்பதைத் திருஷ்டாந்த
பூர்வகமாகத்
தெரிவித்தல்.

தத்துவத்தை யனவரத மனுசந்தித்திடுமுனியாஞ் சார்வபௌமன், றனத்தபடி நிற்பினுமேல் லாஞ்செயினுந் தாவனே வொண்ணு னுமா, லித்தரையேல் லாங்கைக்கொண் டரசாண்டு வேண்டியவா றிருக்கும் வேந்த, னத்துறுமன் னுயிர்களாலேவல்கோளற் கேக்காலு மரியனாமே. 36

(போ)—அகண்டைகரச பிரஹ்மதத்துவானுசந்தானபராயணனாகிய முனீந்திரனானவன் விதி நிஷேதமின்றிச் சுதந்தரனாய்ச் சஞ்சரித்தாலு மிதர ஜனங்களினது நியோச்சிய விஷயனாகான். யேகசக்கிராதிபத்தியம் பெற்று யதேச்சாபரனாய்ச் சர்வசுதந்தரனாயிருக்கிற ராஜாவானவன் றனது நியோச்சிய ஜனங்களாற் சாமானிய விஷயத்தில் பிரவிர்த்திக்கப்படமாட்டானென்பது போலவாம்.

(க)—சத்திய ஞானானந்த ஸ்வரூபமே தானாயிருக்கும் ஞானி விதி விலக்குகளினாலேவப்படானென்பதாம். 3?

(அ-கை)

ஞான நிஷ்டனுக்குப் புண்ணிய பாவகர்மங்
களா லானி விர்த்தி யில்லை யென்பதைத்
திருஷ்டாந்த பூர்வகமாகத்
தெரிவித்தல்.

பரமார்த்த நோக்கமுடை யவனுக்கு முன்னொடுபின் பண்ணப்பட்ட, தருமாதன் மத்தொழில்க ளாற்சம்பத் தேவி பத்தே சற்றுமின்றம், பெருமேகம் பொழிதருநீர் முழுக்கா லும் வெப்பமிகப் பெறுத லாலு, மெரிமேவு பாலைவனத் தின்பயிருக் கேற்றமுட னிழிவு மின்றே. 37

(பொ)—விவேகி புருஷனுக்கு ஞானோதய பூர்வோத்தர காலங்களிற் செய்யப்பட்டதாயுள்ள புண்ணிய பருவகர்மங்க ளால் லாப நஷ்ட சம்பந்தமுண்டாகிறதில்லை. மேக வருஷத் தினாலுஞ் சூரியரஸ்மித் தாபத்தினாலுமூஷரபூமியில் பயிர் விர் த்தியு நாசமும் பலியாதது போலவாம்.

(க)—ஞானியானவன் அகர்த்தாவாதலால் புண்ணிய பாவத் தொடக்கினால் வரும் லாபா லாப மவனுக்குண்டாகா தெனக் கூறியதாம். 37

(அ-கை)

ஞானி பிராரத்த போகம் புசித்துத் தீர
வேண்டு மென்பதைத் திருஷ்டாந்த
பூர்வகமாகத் தெரிவித்தல்.

ஒல்லைவினை யாலுண்டாஞ் சம்பத்தே யாதல்ல தொழி ந்த தாதல், வல்லையநு பவித்தோனப் புரு-ன்மிக திருத் தியினை மருவுவானு, லல்லல்செயும் பாம்பாட்டி தன்வயத் திலகப்பட்ட வரும்பு யங்கம், புல்லியவ னியற்றுதண்ட விதி களைநீங் குறச்சமர்த்துப் பொருந்துங் கொல்லோ. 38

(பொ)—பிராரத்த போகத்தினாலதிகந் துக்காநுபவம் வந்தாலுஞ் சுகானுபவம் வந்தாலும் விவேகி புருஷன் புசிக்கிற வனாகவே திருப்தி யடைகிறான். பாம்பாட்டிவோன் வசமான சர்ப்பமானது அவனதீனமாய்ச் சுகதுக்க மனுபவிப்பது போலவாம்.

(க)—ஞானி விட்சேபநாச பரியந்தமும் பிராரத்தம் புசித்தே தீரவேண்டுமெனக் கூறியதாம். 38

(அ-கை)

*பிராரத்த கர்மானுபவத்தினுல் விவேகி புருஷ*
*னந்தத் தாபமுறு னென்பதைத்*
*திருஷ்டாந்த பூர்வகமாகத்*
*தெரிவித்தல்.*

ஆன்மவறி வுடையவன்முற் கருமபரி பாகவசமடைந்தோ
னேனுந், தான்மருவு தன்பரம வவதியிதா மெனத்தேறித்
தளர்வு நண்ணுன், கான்மருவு வழிச்செல்வோர் கால்
வருந்த மெய்துகினுங் கிராமாந் தத்தின், மேன்மருவு வழி
யளவைத் தெளிந்துவதந் திடைவிசன மேவா னன்றே. 39

(போ)—*தத்துவ தரிசியாகிய புருஷன் பிராரத்த கன்ம சுபாவங்களை யறிந்து கர்மக்ஷயமே நிவிர்த்தி யேது வென்னு நிச்சயத்தினுற் கிலேசமுறுன். கிராமாதி மார்க்க பரிமாணத்தை யிவ்வளவென் றறிந்திருக்கிற புருஷன் சஞ்சாரத்தினுல் சிரமமுடைத்தானவனுயிருந்தாலும் வழிமத்தியிற் றுக்கியாதது போலவாம்.*

(க)—*பிராரத்த முடிவை யறிந்தவ னதனுல் வருஞ் சுக துக்கத்தைக் கணியானெனக் கூறியதாம்.* 39

(அ-கை)

*பிராரத்த துக்கம் மகத்தாய் வரினும் விவேகி*
*புருஷன் சித்தவிக்ஷேபமுறு னென்ப*
*தைத் திருஷ்டாந்த பூர்வகமாகத்*
*தெரிவித்தல்.*

அகம்புறமும் பரமான்மா வொருவனே யாமெனநன்
கறிந்த ஞானி, மிகுந்த விச னமதுறினு மோர்சிறிதுங் கிலே
சமே மேவானன்றே, செகங்கலந்து போர்முகத்தே விசய
முற வொருநோக்காந் தீர ஞனே, னுகம்பரவு மொட்டல
ரால் வருந்துறினுங் கிலேசமற்ப முறுவ துண்டோ. 40

(போ)—*உள்ளிலும் வெளியிலுஞ் சர்வமும் பிரத்யக் ஸ்வரூபமென்று பிரமாணபூர்வகமாக வறிந்திருக்கிற புருஷன்*

பிராரத்த கர்மாதீனமாய் வரு மகத்தான கஷ்டமடைந்தாலுஞ் சித்தத்தில் பரிதாபமுறான். யுத்த முகத்திற் சத்துரு ஜயத்தையே முக்கியலாபமென்று கருதி யுத்தஞ் செய்கிற புருஷன் சத்துருக்களால் மிகவும் அஸ்திராதிகளாலுபத்திரிக்கப் பட்டாலுந் தீனதை யடையாதது போலவாம்.

(கு)—சர்வமு மாத்ம சொரூபமாய்க் கண்ட விவேகிக்குஞ் சுயதிருஷ்டியில் பிராரத்த கர்மந்தோற்று மலாத்மானுபவப் பிரஞ்ஞையாய் விளங்குவனென்பதாம். 40

(அ-கை)

மகத்தான விஷயமும் விவேகியை ருசிப்பிக்க
மாட்டாதென்பதைத் திருஷ்டாந்த
பூர்வகமாகத் தெரிவித்தல்.

ஞாலமதி லுறுவிபவ நனிபரம வற்புதமாய் நண்ணு மேனுஞ், சாலவத னதுவாய்மை தனையறிந்த மாதீரன் றனை மயக்கா, கோலமடவரல்வேடங் தாம்பையின்மேலலங்கரித்துக் கொள்ளா நின்றேன், கேலவினத் தாற்றனைத்தேர் விடலையையா யினுமயக்கக் கிட்டானீடே. 41

(போ)—பிரபஞ்ச சம்பந்தியான சிருக்குச் சந்தன வனிதாதி பதார்த்த விசேஷமானது அஞ்ஞ ஜனங்களுக்குப் பரமாற்புதமாய்த் தோன்றினாலும் உண்மைஞானியான தீரனை மயக்காது. ஸ்திரீ வேஷதாரியாகிய புருஷன் ஸ்திரீ வேஷானுரூபங்களான விலாசங்களினாலவனது ண்மையை யறிந்திருக்கிற புருஷன் அத்தியந்தங் காமுகனாயிருந்தாலு மவனை மோகிப்பிக்கிறதில் சமர்த்தனாகாதது போலவாம்.

(கு)—விஷயத்தின் முடிவை யறிந்திருக்கும் விவேகிக் கதனாலானி யின்றென்பதாம். 41

(அ-கை)

ஆத்மானந்த திருப்தனாகிய விவேகி புருஷன்
பூர்வம் போல விஷய விச்சையினாற்
சோர்வை யடையானென்பதைத்
திருஷ்டாந்த பூர்வகமாகத்
தெரிவித்தல்.

அகத்தினிரந் தரமேலா யிலங்குகின்றவான்மவடி வாய் நிற் போனே, யிகப்போருள்க டமிளுரு முன்போல விசன மே யிமையவதில்லை, யிகழ்ச்சியறத் தெய்வகதி யானிதி யோரிடத்துற்ற லிலம்பா டுள்ளோ, னுகத்தினின்முன் போலெளிய னெனக்கருதிப் புகன்றுலேவ துண்டாங் கொல்லோ. 42

*(போ)—எல்லாக் காலத்திலு நிசானந்தானுபூதியினுல் திருப்தனுகிய ஞானநிஷ்டன் அஞ்ஞான தசையில் மயக்க முற்றதுபோல விஷய லாபா லாபங்களைக் கருதிச் சுகதுக்கம் பொருந்தான். தரித்திரன் தெய்வ யோகத்தினுல் நிதிலாபம் பெற்றதின் பிறகு தீனதை யடையாததுபோல.*

*(கு)—ஞானி மகத்தாகிய பிரஹ்மானந்த நிதியைப் பெற் றவ்வானந்தத்தில் களிப்புற்ற காமனுயிருப்பதால் விஷயப் பிர யோஜனத்தைக் கருதானென்பதாம்.* 42

(அ-கை)

*மயித்திரியாதி குணங்கள் விவேகியான பிரஹ்ம நிஷ்டனிடத்தில் சுபாவமாகவே விளங்கு மென்பதைத் திருஷ்டாந்த பூர்வக மாகத் தெரிவித்தல்.*

பெரியவிழ மறுவுறுதன் மகிமைசெறி பெரியோனைப் பெருஞா னத்துக், தூரியசுப குணங்களலங் கரிப்பனபோ லுஞ்சுயம்வந் தோன்று நிற்கு, மறையனவன் றன்வயனுய்ச் சுகிர்தனுயிருக்கினவற்காளாஞேரும், புரையறுமவ் வரை யனேயே தானேவந் தோன்றிமிகப் போலிவான்றே. 43

*(போ)—பிரஹ்மாநுபவ சுவராச்சிய சாம்பிராச்சிய விபூதி யையடைந்திருக்கிற ஜீவன் முத்தனுக்கு உபகிடதப் பிரசித்தங் களான மயித்திரியாதி சகல குணங்களும் அலங்காரமாகச் சுயமே பொருந்தியிருக்கும். ராஜாவானவன் அத்தியந்தஞ் சுகிர்த்தாயுஞ் சுவாதீனனுயுமிருக்குங் காலத்தில் அவனது பிருத்தியாளு மிஷ்ட ஜனங்களுந் தாமே வந் தனுசரிப்பது போலவாம்.*

(க)—சுத்த சத்துவ விருத்தியை யுடைத்தான சீவன் முத்தனை மயித்திரியாதி குணங்கள் தாமே வந்தனுசரிக்கு மென்பதாம். 43

(அ-கை)

*பிரமாண சித்தமாகிய சுவானுபூதிப் பிரதான மான ரகசியார்த்தத்தைக் கூறிப் பிரகா ணத்தை யுபசம்மரித்தல்.*

அஞ்ஞான மேயில்லை யிவ்வுலக முளதாமேன் றறைவ தெங்கே, விஞ்ஞான வடிவாஞ்சீ வேசதே சிகரெனச்சொல் விகற்பஞ் சேய்த்தா, மெய்ஞ்ஞான வோருசுவையாய்த் தனித்துநிரு மலமாகி விளங்குந் தானு, யெஞ்ஞான்றும் பரி புரண கேவலமாம் பிரமமே யானுகின்றேன். 44

(பேர்)—*மாயையு மாயாகாரியங்களுங் காலத்திரயத்திலு மில்லவேயில்லை யென்னுஞ் சகல சுருதிப் பிரமாணங்களினு லுஞ் சொப்பிரகாசாத்ம வஸ்துவில் அந்தகார ரூபமானவவித் தை வருகிறதற்கிடையில்லை யென்னும் பிரமாணயுத்தியினு லும் ஞானிகளுடைய வனுபவத்தினுலும் விசாரிக்குமிடத்தில் அஞ்ஞான மென்பதில்லவேயில்லை. அதன் கற்பிதமான ஜகத் பிரசங்கமு மில்லவேயில்லை. சீவேசுவர குருவாதி கற்ப னையு மில்லவேயில்லை. திரிகாலத்திலு நிர்மாயமாய் அகிண்டா னந்தைகரசமாய்ப் பிரத்தியக்ஃபின்னமாய்ப் பரமாத்ம சொரூ பமான சோதிஸொன்றேயிருக்கும் பொருள் நானுகிறேன்.*

(க)—*அகண்ட சச்சிதானந்த பரமாத்வைத பரப்பிரஹ்ம சொரூபமே பேதத்திரயசூனியமாய்த் தானே தானுய் விளங் கிய பொருள் நானுயிருக்கிறேனென்னுந் திடானுபவப் பிரஞ் ஞையுடைத்தான விவேகியே சகல பாசபந்த நிவிர்த்தனுய கிருதகிருத்தியனுவனெனக் கூறியதாம்.* 44

**சதாசிவப்பிரமமென்னும் யோகீந்திரரால்**

*அருளிச்செய்யப்பட்ட* **அத்துவிதாசமஞ்சரி**

**யென்னும்** *பிரகரணம் முற்றிற்று.*

சமாதியவத் தையிலுதித்தோற் றைக்கோம்ப னுப தேசஞ் சாற்ற லாலு, மமானமயப் பாமசிவேந் திரனே னுந்தே சிகவரியா னனுஞ்ஞையாலுஞ், சுமாவிருக்கச் சதாசி வமா தவனேதிவ் வத்துவிதச் சுவைப் பூங்கோத்தே, யெமானடைக்து மகழகமா மறிவுடையோ ராதரத்தா லெய் தற் பாற்றம். 1

சுத்தசதா சிவயோகி வரியானே தியவிந்தத் தூய நன் னூல், புத்திநலமுடையோர்க்குப் பவநோய்க்கோ ரவுடத மாய்ப் புகலலாதுங், கோத்துருபா தகங்களுக்குக் கடுவாது முபநிடதக் குறிப்பா மேலா, முத்தமமாமாநந்த வழுதநிறை குடமாமென்றுரைப்பர் மேலோர். 2

துய்யசதா சிவப்பிரம மேனுமுனிவன் வடமொழியாற் சொல்லப்பட்ட, செய்யவத்து விதரசமஞ் சரிநூலைச் செந் தமிழ்ப்பாச் செய்து தந்தான், வையமிசைப் பொலிகழனி மாநகர்வாழ் சோதிலிங்க வடிவமான, வையன்முத்தி ராம லிங்க குருபரனென் னகம்வாக்த மமைத்து நின்றே. 3

குருப்யோ நமஃ.